பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 19 திங்கட்கிழமை (02.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :157

# யாழ்.மேதினப் பேரணியில் ஐம்பதாயிரம் பேர் திரள்வு!

## விடுதலைப் போராட்டத்தை துரிதப்படுத்துமாறு தலைவர் பிரபாவிடம் கோரி மக்கள் பிரகடனம்

–சிறப்பு அலுவலகச் செய்தியாளர் குழுவும் பிரதேச செய்தியாளர்களும் –

யாழ்ப்பாணம்,மே2

**'பொறுத்தது போதும் பொங்கி எழுவோம்' என்ற கோஷம் முழங்க பிரமாண்டமான மேதினப் பேரணி நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. குடாநாட்டின் நாலாபுறங்களிலும் இருந்து வந்த ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பேரணியில் பங்கேற்றனர்.**

**தமிழரின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காகவும், தேசத்தின் இறைமையை மீட்பதற்காகவும் விடுதலைப் போராட்டத்தைத் துரிதப்படுத்துமாறு தேசியத் தலைவர் வே. பிரபாகரனிடம் கோரிக்கை விடுக்கும் மக்களின் பிரகடனம் பேரணியின் நிறைவில் வெளியிடப்பட்டது.**

படங்கள் 2ஆம், 3ஆம் பக்கங்களில்....

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் இருந்து நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு பேரணி ஆரம்பமானது. அதற்கு முன்னர் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து வாகனங்களிலும் சைக்கிள்களிலும் வந்த மக்கள் நல்லூர்ப் பகுதியில் திரண்டனர். அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளும் பெரும் எண்ணிக்கையில் அங்கு வந்துசேர்ந்தன.

பேரணி நல்லூர் ஆலயத்தின் பின்புறமாக - அரசடி வீதி ஊடாக - நகர்ந்தது.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பெரிய அளவிலான 'கட் அவுட்' ஒன்று பேரணியின் முன்னால் எடுத்துச்செல்லப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேரணியை நிறைத்த சிவராமின் படங்கள்

யாழ்ப்பாணம்,மே2

கடத்திச் சென்று படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் உருவப்படங்கள் நேற்றைய மேதினப் பேரணியில் பெரும் எண்ணிக்கையில் எடுத்துச் செல்லப்பட்டன.

பேரணியில் கலந்துகொண்ட பெண்களும் சிறுவர்களும், வயோதிபர்களும் சிவராமின் படங்களை சுமந்துசென்றதைக் காணமுடிந்தது.

ஊடகவியலாளரைக் கொலை செய்த சதியை அம்பலப்படுத்துமாறு சர்வதேசத்தைக் கோரும் கோஷங்கள் பலவும் பேரணியில் எழுப்பப்பட்டன.

சமாதான காலம் தமிழர்களுக்கு சாவின் காலமா? என்று பேரணியினர் குரல் எழுப்பிச் சென்றனர்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில், ஏனைய இடங்களில் நடைபெற்ற மேதினப்பேரணிகளில் ஊடகவியலாளர் சிவராமின் படங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அவரது கொலையைக் கண்டித்துக் கோபாவேசக் குரல்கள் எழுந்தன. (ஐ-7-12-87)

## கிளிநொச்சி மேதினத்திலும் மக்கள் திரண்டு பங்கேற்பு

### தமிழீழத் தனியரசை வலியுறுத்தி கோஷம்!

கிளிநொச்சி,மே2

கிளிநொச்சியிலும் மேதினப் பேரணி நேற்று எழுச்சிபூர்வமாக நடந்தது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிளிநொச்சி நகருக்குத் திரண்டுவந்த சுமார் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பேரணியில் பங்கேற்றனர்.

பிற்பகல் 3 மணியளவில் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஆரம்பமான பேரணி, ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தை அடைந்தது.

'பாட்டாளி மக்களுடைய விடுதலை என்பது தமிழீழத் தனியரசில்தான் சாத்தியமாகும்' என்ற தொனிப்பொருளில் பேரணியில் கலந்துகொண்டிருந்த மக்கள் கோஷம் எழுப்பிச் சென்றனர். பல்வேறு அமைப்புகளினதும் ஏற்பாட்டில் சுமார் நூற்றிஐம்பது ஊர்திகள் ஊர்வலத்தில் பங்கேற்றன. தொழிலாளர்களினது துன்ப துயரங்களையும், தமிழ்மக்கள் மீதான இன ஒடுக்குமுறைகளையும் சித்திரிக்கின்ற வகையில் ஊர்திகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. கிளிநொச்சி பொது மைதானத்தில் இடம்பெற்ற பொதுக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் துயரங்களை சித்திரித்த ஊர்தி முதல் பரிசுக்குத் தெரிவு

நேற்றைய மேதினப் பேரணியில் கலந்துகொண்ட ஊர்திகளில் தெரிவுசெய்யப்பட்ட ஊர்திகளுக்கு நேற்றைய கூட்டத்தின் முடிவில் பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வின் ஏற்பாட்டாளர் இளம்பிறையன் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஊர்திகளுக்கான பரிசில்களை பொது அமைப்புகளின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ் வழங்கினார்.

கடற்றொழிலாளர்களின் துயரங்களை வெளிப்படுத்தும் வகையில் - ஊர்காவற்றுறை, தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கத்தினால்- வடிவமைக்கப்பட்ட ஊர்தியே முதல் பரிசை வென்றிருக்கிறது.

இரண்டாவது பரிசை கைதடி தெற்கு சனசமூக நிலையம் பெற்றுள்ளது. உழைப்பாளர் சிலையை அப்படியே சித்திரிக்கும் வகையில் நிறுவப்பட்ட ஊர்திக்கே இந்தப் பரிசு கிடைத்தது.

மூன்றாவது பரிசு கடற்படையினரால் மீனவர்கள் கடலில் தாக்கப்படுகின்ற காட்சியை தத்ரூபமாகக் காட்டிய ஊர்திக்கு வழங்கப்பட்டது. இந்த ஊர்தியை வடிவமைத்தவர்கள் சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர்.

சிறப்புப் பரிசு பெற்ற 5 ஊர்திகளின் விவரம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி மேதினக் கூட்டங்கள்

கொழும்பு,மே2

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஏற்பாடு செய்த மேதினப் பொதுக் கூட்டம் காலிமுகத் திடலில் நேற்று நடைபெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதற்குத் தலைமை வகித்தார். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

ஜே.வி.பியின் மேதினக் கூட்டம் பி.ஆர்.சி. திடலில் நடைபெற்றது. ஜே.வி.பியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் இதில் பங்கேற்றனர். புதிய இடதுசாரி முன்னணி கொழும்பு குண சிங்கபுர பிரைஸ் பார்க்கில் தனது மேதினக் கூட்டத்தை நடத்தியது.

ஐ.தே.கட்சியின் மேதினக் கூட்டம் கொழும்பு மாநகர சபைத் திடலில் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமை

(14ஆம் பக்கம் பார்க்க)

## நுவரெலியாவில் ஜனாதிபதி விடுமுறை கழிக்கிறார்!

கொழும்பு,மே2

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொழும்பில் நடத்திய மேதினக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

அவர் நேற்றுமுன்தினமே நுவரெலியா சென்று அங்குள்ள ஜனாதிபதி மாளிகையில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார் எனத் தெரியவந்தது.

நுவரெலியாவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினப் பேரணியும், கூட்டமும் நேற்று நடைபெற்ற சமயம் அந்த நகரத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் பிஸ்ரலுடன் கருணாவின் சகா கைது!

### சிவராம் படுகொலையை திசைதிருப்பும் முயற்சியா?



கொழும்பு,மே2

கருணாவின் முக்கிய சகா எனக் கருதப்படும் இனியபாரதி என்பவர் அம்பாறையில் பிஸ்ரலுடன் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவித்து நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டிருக்கின்றார்.

பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவராக இவர் இருக்கலாம் எனக்கருதப்பட்ட சூழ்நிலையில், இப்படி இவர் இலங்கைப் பொலீஸாரால் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை சிவராம் படுகொலை விவகாரத்தில் சூத்திரதாரிகளைக் காப்பாற்றும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட திசை திருப்பும் முயற்சியாக இருக்கலாம் எனச் சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கின்றது.

கடந்த வியாழன் இரவு 10.30 மணியளவில் பம்பலப்பிட்டியில் வைத்து சிவராம் கடத்தப்பட்டார். அடுத்த நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நாடாளுமன்றக் கட்டடத்துக்குப் பின்னால் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக வெள்ளியன்று தகவல் வெளியிட்ட 'நிதர்சனம்' தமிழ் இணையத்தளம் சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கருணாவின் சகாவான இனியபாரதி என்பவர் தொடர்புபட்டிருந்தார் எனவும் தெரிவித்திருந்தது.

சிவராமைக் கடத்திச்செல்வதற்கு ஆடம்பர வாகனத்தில் பம்பலப்பிட்டிக்கு வந்த ஆயுததாரிகளின் குழுவில் இனியபாரதியும் ஒருவர் என்றும் -

அவரே அங்கு சிவராமைப் பெயர்கூறி அழைத்து அடையாளம் காட்டினார் என்றும் - நிதர்சனம் இணையத்தளம் அப்பட்டமாகக் குற்றம் சுமத்தியிருந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் சிவராமின் இறுதிச்சடங்கு இன்று

கொழும்பு,மே2

கொழும்பு பம்பலப்பிட்டியிலிருந்து கடந்த வியாழக்கிழமை இரவு கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் 'மாமனிதர்' தர்மரத்தினம் சிவராமின் இறுதிச் சடங்குகள் இன்று அவரது சொந்த இடமான மட்டக்களப்பில் நடைபெறவுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை அவரது சடலம் நாடாளுமன்றத்துக்குப் பின்புறம் இருந்து கண்டெடுக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் காலை கொழும்பு தேசிய வைத்தியசாலைச் சவச்சாலையிலிருந்து எடுத்துவரப்பட்ட அவரது பூதவுடல், கல்கிசையிலுள்ள அவரது

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கட்டுமானங்களைப் பலவீனப்படுத்தி தமிழரை அழிக்க அரசு புதிய வியூகம்

## மேதின உரையில் இளம்பரிதி



யாழ்ப்பாணம்,மே2

யுத்தநிறுத்தத்தை நீடித்துக்கொண்டு தமிழ் மக்களுக்கான கட்டுமானங்களைப் பலவீனப்படுத்தி, தமிழரை அழிப்பதே அரசின் புதிய வியூகம் ஆகும்.

நேற்றைய மேதினப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரம் மனிதனின் பிறப்புரிமை, சுயநிர்ணய உரிமை இயல்பு வாழ்வியலின் அங்கீகாரம். இதை மறுப்பது மன்னிக்கமுடியாத குற்றம். மறுக்கமுடியாத மனித உரிமை மீறல் இது. உலக சமூகத்தின் குரல்.

நிலத்தால், மொழியால், பண்பாட்டு அடையாளங்களால், வாழ்முறைகளால் வரலாற்றின் குறிப்புக்களால் தனித்துநிற்கும் இனம் தன்னாட்சிக்குத் தகுதியுடையது என ஐ.நா. சாசனம் அறுதியிட்டு உரைக்கிறது.

இந்நாள் ஒடுக்கப்பட்ட, சுரண்டலுக்கு உள்ளான உலகத் தொழிலாளர் தமது உரிமைகளை வென்றெடுத்த ஒரு பொதுநாள். இன்னாள் ஒடுக்கப்பட்ட எல்லோரும் அணிதிரளும் நாளாக பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது.

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழின அழிப்பு நடைமுறையை உடைத்தெறிந்து தம் இருப்பை நிலைப்படுத்தி வரும் தமிழ்த்தேசிய இனம் தன் அபிலாஷைகளை சர்வதேசத்திற்கு மீண்டும் வெளிப்படுத்தும் நாளாகவும் இது அமைகிறது.

எம் இனத்தின் மூத்த தலைவர்கள் சிலர் நம்பிக்கையீனத்தினாலும் தூரநோக்குப் பார்வையின்மையாலும் தந்துரோபாயமற்ற போக்காலும் சிங்களத் தலைவர்கள் விரித்துக்கொண்ட பொறிக்குள் அகப்பட்டு மீளமுடியாது போனதால் தமிழ்த்தேசிய இனத்தின் போராட்ட முனைப்புகள் மழுங்கடிக்கப்பட்டன.

முடியாது என்று ஒன்றுமேயில்லை என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு தமிழ்த்தேசிய இனத்திற்கு தலைமை தாங்கும் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தன்னம்பிக்கை, உயர்வு, தூரநோக்குப் பார்வை, தந்திரோபாய மதிநுட்பம், எதிரிகளின் பொறிகளை உடைத்தெறிந்து எதிரிகளை அப்பொறிக்குள் தள்ளும் ஆற்றல், ஆளுமை சர்வதேச ஒழுங்குகள் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தி எதையும் எதிர்கொண்டு முறியடிக்கும் நுட்பம், பலமிக்க சேனைக் கட்டமைப்பை நிறுவி தேசிய அரசியலிலும், சர்வதேச அரசியலிலும் முன்னேற்றங்களை ஏற்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கான காலத்தை தீர்மானித்துக்கொண்டிருக்கிறார்.

எமது உயிரிலும் மேலான அன்பார்ந்த மக்களே யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்றாண்டுகள் கடந்துகொண்டிருக்கின்றன. நம்பிக்கையான சூழல் மாறி இயல்பு நிலைக்கு நெருக்கடிகள் ஏற்பட்டு ஒப்பந்த நடைமுறைக்கு மாறாக அரசின் போக்கு இருக்கின்றது. ஆனால், தமிழர்தரப்பு நிதானத்தைப் பேணுகின்றது. இது பலவீனத்தின் வெளிப்பாடு அல்ல பலத்தின் குறியீடே.

யுத்தப் பாதிப்புகளுக்குத் தீர்வு கிடைக்கும் என நம்பிய மக்களுக்குத் தீர்வுகிடைக்கவில்லை. மீளக்குடியமரலாம் என நம்பிய மக்கள் ஏமாற்றப்பட்டனர். தங்களது ஊர்களையும், காணிகளையும், வீடுகளையும் பறிகொடுத்த மக்கள் இன்றும் நாதியற்றுக் கிடக்கின்றார்கள்.

டக்ளஸ், கருணா போன்ற இராணுவத் துணைக் குழுக்களின் சாட்டில் ஸ்ரீலங்காப் படைகள் தமிழர் தாயகப் பகுதிகளில் தமது கெடுபிடிகளை அதிகரித்து வருகின்றனர். பொருளாதார வளர்ச்சியும் வேலைவாய்ப்புகளும் இன்றி எமது வடக்கு - கிழக்கில் இன்னும் மக்கள் வாழ்கின்றார்கள். போரழிவுகள் இன்னும் மாறாது உள்ளன. இவற்றையெல்லாம் விட சுனாமி பேரலைகள் எம்மக்களை பெரும் அழிவிற்குள்ளும் அவலத்திற்குள்ளும் தள்ளியுள்ளது.

விரக்தி அடைந்த எம்மக்கள் கொதிப்படைந்து தேசியத் தலைவருக்கு தமக்கான விடிவினை விரைவுபடுத்த வழிகளை திறக்குமாறு அழுத்தம்கொடுத்து நிற்கும் நிலையினை நாம் இங்கு காண்கின்றோம்.

மக்களே தீர்மானங்களை எடுக்கும் காலச்சக்கரம் இன்று உருவாகி இருக்கின்றது. மக்கள்மீது நம்பிக்கை கொண்ட தலைவனும் தலைவர்மீது நம்பிக்கை கொண்ட மக்களும் இந்தக் காலச் சக்கரத்தை வெற்றிகொள்வார்கள் என்பது திடமான உறுதி என உரைக்கின்றேன்.

மனித உரிமை என்ற விடயத்தில் உலக ஒழுங்கு முதன்மைகொண்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் அதிக செல்வாக்கினை சர்வதேசத்தில் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள இத்தருணத்தில் சந்திரிகா அரசும் அதன் பங்காளியாக ஜே.வி.பியும் இனவாதத்தினை கிளப்பி அரசியல் அமைப்பு சட்ட வரைபைக் காரணம் காட்டி தமிழர் அரசியல் உரிமைகளை மறுக்கின்றன. மனிதநேய உதவிகளைப் புறக்கணிக்கின்றன.

சந்திரிகாவின் காலத்தில் நடந்த செம்மணிப் படுகொலையை உலகறியச் செய்த நாட்டுப் பற்றாளர் நிமலராஜனையும், துரோகத்தனத்தை தோலுரித்துக் காட்டியதால் நாட்டுப்பாற்றாளர் நடேசனையும் தமிழர் தேசியத்தினை வலியுறுத்தி நின்றதால் மாமனிதர் சிவராமினையும் படுகொலை செய்தது போன்ற மோசமான சம்பவங்கள் சர்வதேச சமூகத்திற்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உரிமைக்காகத் துடித்துக்கொண்டிருக்கும் எம்மக்கள் மீண்டும் மீண்டும் நம்பிக்கையுடன் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தம்மைப் பலப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இதுவே யதார்த்தமுமாகும்.

எனவே, நம்பிக்கையுடன் திரண்டெழுவோம் தலைவர் அதற்கான வழிகளைத் திறப்பார். தலைவர் பிரபாகரனின் இலட்சியம் வெற்றி பெறும். அவரின் தீர்க்க தரிசனம் நிறைவுபெறும். மாவீரர்களின் கனவுகள் நனவாகும். குருதி தந்து, சோறு ஊட்டி, வியர்வை சிந்திய எம் மக்கள் சுதந்திரம் அடைவார்கள் என்பது திண்ணம் என்றார் இளம்பரிதி. (த-7-30-86)



கிளிநொச்சியில் நடைபெற்ற மேதினக் காட்சிகள்



## மருத்துவபீட மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரகடனம் வாசிப்பு

யாழ்ப்பாணம்,மே2

யாழ். மருத்துவபீட மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் மேதின நிகழ்வுகள் நடந்தன.

இந்த நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாராஜ் தலைமை வகித்தார்.

பொதுச் சுடரினை மாவீரர்களான கஜன், சுரேன் இருவரினதும் தாயார் லத்தீப் பரமேஸ்வரி, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, தென்னிந்திய த் திருச்சபை வண.பிதா ராஜ்குமார், மேதின ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த இளம்பிறையன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணனும் - மேதினச் சுடரை கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் தங்கராஜாவும் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து பெண்கள் பண்பாட்டு மையத்தினரின் அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் அரங்கப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

அதனையடுத்து மேதினப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. மேதினப் பிரகடனத்தை தமிழீழத் தேசியத் தலைவருக்கு வழங்குவதற்காக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாராஜ், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியிடம் கையளித்தார். பின்னர் சிறப்புரைகள் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் றொபின்சன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே சிவாஜிலிங்கம், கி.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன், புதிய ஜனநாயகக் கட்சியின் வடபிரதேச செயலாளர் செல்வம், பெண்கள் அமைப்பின் சார்பில் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளன இயக்குநர்சபை உறுப்பினர் இரட்ணராஜா, ஊடகவியலாளர் சார்பில் வடபிராந்திய பத்திரிகையாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வன், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (ஜ-7-12-30-86-190)

## நேற்றைய மேதினப் பிரகடனம்

யாழ்ப்பாணம்,மே2

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட மாபெரும் மேதினப் பேரணியின் முடிவில் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்து மேதினப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

தமிழ்த்தேசிய தொழிற்சங்கக் கூட்டமைப்பு வெளியிட்ட அந்தப் பிரகடனத்தின் முழு விவரம் வருமாறு:-

தமிழ்த்தேசிய இனத்தின் உழைக்கும் வர்க்கத்தினரை உள்ளடக்கிய தமிழ் மக்களாகிய நாம் - அனைத்துலக உழைப்பாளர் நாளாகிய மேநாளில் - மனிதத்தின் உன்னத வேட்கையாகிய சுதந்திரத்தையும், கௌரவத்தையும் வழங்கவல்ல சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட மனித உரிமைகளை முன்வைத்து - பினவரும் பிரகடனத்தை வெளிப்படுத்துகிறோம்.

1) தமிழ்த் தேசத்தின் இருப்பையும், சுதந்திரத்தையும் மீட்பதற்காக பல்வேறு களங்களிலும் தேசிய விடுதலைப் போராட்டத்தை பொருத்தமான வகைகளில் வழிநடத்தும் தமிழ்த் தேசிய இனத்தின் தலைமையாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எமது தேசியத் தலைவராகிய மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் எமது பூரண ஒத்துழைப்பை வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என உறுதி பூணுகின்றோம்.

2) ஸ்ரீலங்கா சிங்கள மேலாதிக்க அதிகார வர்க்கமானது தொடர்ந்தும் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதிலேயே விடாப்பிடியான கரிசனை கொண்டுள்ளது என்பதை சகோதர சிங்கள உழைக்கும் வர்க்கம் புரிந்துகொள்ளவேண்டும். மெய்யான பிரச்சினைகளிலிருந்து சிங்களதேச உழைக்கும் வர்க்கத்தினரை ஏமாற்றித் திசைதிருப்பும் நோக்குடன் சிங்களதேச அரசியல் கலாசாரம் பேரினவாத அடித்தளத்தில் நின்று கோலோச்சுகிறது. சிங்கள அதிகார வர்க்கத்தினரை முறியடிக்க முன்வருமாறு சிங்கள உழைக்கும் வர்க்கத்தினரை சகோதர வாஞ்சையுடன் அழைக்கின்றோம்.

3) போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்களாகியும் உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் சிறிலங்கா அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை; இடம்பெயர்ந்த மக்கள் தமது நிலத்துக்கு திரும்பவில்லை; இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்கின்றன; தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ்த்தேச மக்களையும் தாக்குவதன் மூலமும், படுகொலைகள் செய்வதன் மூலமும் - சீண்டும் ஸ்ரீலங்கா இராணுவத்தினதும், அதன் துணைக் குழுக்களினதும் செயற்பாடுகள் போர் முனைப்பையே எடுத்துக்காட்டுகின்றன. எனவே, ஸ்ரீலங்கா படைத்தரப்பும், அதன் துணைக குழுக்களும் எமது தாயகப் பிரதேசத்திலிருந்து அகற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

4) தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான முன்மொழிவுகளை அப்பட்டமாகவே நிராகரித்து, ஸ்ரீலங்கா அரசாங்கமானது, வேண்டுமென்றே நிரந்தர சமாதானத்துக்கான பாதையில் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி தடம்புரட்டி விட்டுள்ளது; அத்துடன் இன அழிப்புப் போரை மீள ஆரம்பிக்கும் முயற்சிகளை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்கிறது. இதற்கு தமிழ்த்தேச மக்களாகிய நாம் முகங்கொடுக்க தயாராகவே உள்ளோம்.

மேற்கூறியவற்றிலிருந்து தமிழ்த்தேசிய இனமானது சுயகௌரவத்துடன் கூடிய சுதந்திர வாழ்க்கை குறித்த நிர்ணயமான தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளது என்பது வெளிப்படையாகின்றது. இவை மனித உரிமைகளின் பாற்பட்டவை என்பதை அனைத்துலகமும் புரிந்துகொள்ளவேண்டும்.

எனவே,

எமது தேசிய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காகவும், எமது தேசத்தின் இறைமையை மீட்பதற்காகவும் - எமது சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டு - தேசிய விடுதலைப் போராட்டத்தை துரிதப்படுத்த வேண்டுமென்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கையை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கு முன்வைக்கின்றோம்.

உயர் தர்மத்தையும், நியாயத்தையும் கொண்ட தேசிய விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணிப்புடன் தொடர்ந்து பயணிப்போம் என தமிழ்த்தேசத்து மக்களாகிய நாம் உறுதி கூறி இப்பிரகடனத்தை வெளியிடுகின்றோம்.

(ஜ-7-12-30-17-86-15-88)



மேதினச் சுடரை கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் தங்கராஜா ஏற்றிவைக் கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஊடகத்துறை ஊடாக உத்வேகம் ஊட்டியவர்

சிங்கத்தின் குகைக்குள் நின்றுகொண்டு உரிமைக்காக வீரத்துடன் உறுமிய புலி தர்மரத்தினம் சிவராம்.

ஓர் இனத்தின் மாமனிதராகப் போற்றக்கூடிய- ஏற்றக்கூடிய - ஒருவராக ஓர் ஊடகவியலாளர் இனப்பணி ஆற்ற முடியும் என்பதை நிரூபித்திருக்கின்றார் அவர்.

*"சிங்கள அரசு மேற்கொண்டுவருகின்ற அப்பட்டமான பொய்ப் பரப்புரைகளை சர்வதேச சமூகத்திற்கும், இராஜதந்திர சமூகத்திற்கும் சாதுரியமாகவும், சாமர்த்தியமாகவும் அம்பலப்படுத்தியவர் சிவராம். சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையிலே நின்றுகொண்டே, அந்தப் பேரினவாதம் தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறினார். ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்ட போதும் அஞ்சா நெஞ்சுடன் அவற்றை எதிர்த்து நின்றார்."* - என்று இந்த ஊடகவியலாளருக்கு புகழாரம் சூட்டியிருக்கின்றார் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

வெளிநாட்டில் எங்கோ ஒரு மூலைக்குள்ளோ, அல்லது அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு பிரதேசத்துக்குள்ளோ பாதுகாப்பாக இருந்துகொண்டு தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் எழுப்பியவர் அல்லர் சிவராம். அல்லது தன்னை மறைத்து, அநாமதேயமாக இயங்கி, ஆள் தெரியாமல் - முகம் தெரியாமல் - பெயரை வெளிப்படுத்தாமல் - இணையத்தள வலைப்பின்னல் மூலமாக, அடையாளமே காட்டாமல் முழங்கியவர் அல்லர் அவர்.

தமிழில் மாத்திரம் - தமிழர்களுக்குள் மட்டும் - தனது கருத்தை முன்வைத்தவருமல்லர் சிவராம்.

ஆள், அணி, அம்பு என்று தனக்குப் பின்னால் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பையோ, பாதுகாப்பையோ வைத்துக்கொண்டு தலைநகரில் இருந்து இயங்கியவரும் அல்லர்.

தன்னை வெளிப்படுத்தி - தன் முகத்தை வெளிப்படுத்தி - தமிழின உரிமைகள் தொடர்பாகத் தன் மனதில் தோன்றிய தனித்துவமான கருத்துக்களை வெளிப்படுத்தி - பகிரங்கமாக - பயமின்றி - சுயாதீனமாக - இயங்கிய ஊடகப் போராளி அவர்.

தனி ஒரு மனிதராக, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் சரி, இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதியிலும் சரி - யுத்த பூமியான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பகுதிகளிலும் சரி, தென்னிலங்கையின் தலைநகரிலும் சரி - உள்ளூரிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி - அனைத்துலகுக்கும் புரியக்கூடிய ஆங்கில மொழியில் தனது கருத்துக்களை ஆணி அடிப்பது போலி அறைந்து கூறியவர் சிவராம்.

ஆயுதப்போராளிகள் சாதிப்பது போல இந்த எழுதுகோல் போராளியின் கருத்துத் தாக்குதல்களும் சிங்களப் பேரினவாதத்துக்கு ஆழமான பாதிப்புக்களை ஏற்படுத்தின. அதனால்தான் அரச பயங்கரவாதம் அவருக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

சிவராமின் இனப்பற்றுக்கும் விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து அவருக்கு 'மாமனிதர்' என்ற உயர் தேசிய விருதை வழங்கிக் கௌரவித்த தலைவர் பிரபாகரன் *"உன்னத இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு அழித்து விடுவதில்லை. எமது தேசத்தின் வரலாற்றில் அவர்களுக்கு என்றும் அழியாத இடம் உண்டு"* - என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழீழ மண்ணின் விடிவிற்காகவும் தமிழீழ மக்களின் விடுதலைக்காகவும் ஓங்கி ஒலித்த ஓர் உரிமைக் குரல் இன்று ஓய்ந்துவிட்டது என்பதையும் தலைவர் பிரபாகரன் ஆழ்ந்த கவலையோடு தெரிவித்திருக்கின்றார்.

ஊடகவியலாளர் சிவராமுக்கு முன்பு இந்த 'மாமனிதர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் தமிழ் அரசியல்வாதியான குமார் பொன்னம்பலம். அவரும் தமிழ் மண்ணின் விடிவிற்காகவும் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் எதிரியின் கோட்டையான தென்னிலங்கையில் இருந்துகொண்டு அஞ்சா நெஞ்சத்துடன் குரல் எழுப்பியவர், சிவராம் போன்று அதற்காக எதிரியினால் படுகொலை செய்யப்பட்டார்.

இப்படித் தனி மனிதர்களை அழித்துவிடுவதன் மூலம் தமிழர்களின் விடுதலைப் போராட்ட ஆன்மாவை அழித்து விடலாம் எனப் பேரினவாதம் பகல் கனவு காண்கிறது.

குமார் பொன்னம்பலம் போன்ற அரசியல் போராளியையோ அல்லது சிவராம் போன்ற ஊடகப் போராளியையோ பேரினவாதம் கொல்வதால் விடுதலைப் போர் அழிந்துவிடப்போவதில்லை. அது மேலும் மேலும் உரம்பெறும் என்பதே உண்மை.

ஊடகத்துறை ஊடாக விடுதலைப் போராட்டத்துக்கு எவ்வாறு அதிக உத்வேகம் ஊட்டமுடியும் என்பதை தமது வாழ்வின் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார் சிவராம்.

இனப்பற்றும் தமிழ்த் தேசிய உணர்வும் கொண்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அவர் என்றும் ஒரு ஆதர்ஷ வழிகாட்டியாக இருப்பார். அது உண்மை.



புதிய ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற மேதினப் பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தின் போதும் எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ். சத்திரத்துச் சந்தியில் இருந்து பேரணி ஆரம்பமாகி யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நோக்கிச் செல்வதையும் - பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய ஜனநாயக் கட்சியின் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரதேச ரீதியாக நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,மே 2

யாழ். மாவட்டத்திலுள்ள காணிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடமாடும் சேவை யாழ். மாவட்டத் துரித காணிச் செயலணியால் நடத்தப்பட்டுவருகின்றது.

காணிப் பயன்பாடு தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள், காணிச் செயலணிக்குக் கிடைத்துள்ளன. நேரில் சென்று அப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்குடன் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டுவருவதாக உதவிக்காணி ஆணையாளர் கு.ஞானசேகரம் தெரிவித்தார்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடமாடும் சேவை நடத்தப்படவுள்ள திகதி, நேரம், இடம் பற்றிய விவரம் வருமாறு:-

சங்கனைப் பிரதேச செயலர் பிரிவில் நாளை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலகத்திலும் -

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 9ஆம் திகதி கைதடி கிழக்குக் கிராம சேவையாளர் அலுவலகத்திலும் -

கர[illegible]ட்டிப் பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிக்குக் கரணவாய் மேற்கு மண்டான் கொலணியிலும் -

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி பாற்பண்ணைக் கொலணியிலும் நடமாடும் சேவை நடைபெறும்.

காணி தொடர்பான பிரச்சினைகள் உள்ளவர்கள் இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் கிராம சேவையாளர், துரித காணிச் செயலணி உதவி ஆணையாளர், காணி உத்தியோகத்தர் உட்படப் பலரும் நடமாடும் சேவையில் கலந்துகொண்டு, பிரச்சினைகளைக் கேட்டறிவர்.

இதேவேளை, இந்த நடமாடும் சேவை, கோப்பாய் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுகளில் அண்மையில் [illegible] பட்டமை குறிப்பிடத்தக்கது. (து-204[illegible]3)

# சட்டக் கல்லூரிக்கும் இனிமேல் 'இசற்' ஸ்கோர் முறையில் அனுமதி

## போட்டிப் பரீட்சைகள் ரத்து என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 2

சட்டக் கல்லூரிக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகச் சட்டக் கல்லூரி கவுன்சில் அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த அனுமதிப் பரீட்சை மூலம் மாணவர்களை உள்வாங்கும் திட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் -

பல்கலைக்கழக அனுமதிக்கு நடைமுறையிலுள்ள 'இசற்' ஸ்கோர் அடிப்படையிலேயே மாணவர்கள் உள்வாங்கப்படுவார்கள் என்றும் மேற்படி கவுன்சில் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா. சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன். மேல் நீதிமன்ற நீதிபதி நிகால் ஜெயசிங்க ஆகியோர் உள்ளிட்ட சட்டக் கல்லூரி கவுன்சிலே மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது.

இத்தீர்மானத்தின்படி வெளிநாடுகளில் பட்டம் பெறுபவர்கள் சட்டக் கல்லூரிக்குள் அனுமதிபெறும் வாய்ப்பும் தடைசெய்யப்படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டது. (து-202)

# இளம் தாயின் உயிர் காக்க உதவுங்கள்



இருதயத்தில் துவாரம் உள்ளதால் பாதிக்கப்பட்ட கொடிகாமம் கச்சாய் வடக்கைச் சேர்ந்த இளம் குடும்பப்பெண்ணின் உயிர்காப்பு நிதிக்கு உதவுமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பரோபகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வினாயமூர்த்தி குணச்செல்வி (வயது -24) என்னும் இரண்டு குழந்தைகளின் தாயின் உயிர்காப்புக்கே நிதி கோரியுள்ளனர்.

இந்தத் தாயின் இருதய நோய் அறுவைச்சிகிச்சைக்கு 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா தேவையெனக் கொழும்பு நவலோக வைத்தியசாலையினர் அறிவித்துள்ளனர்.

இந்த இளம்தாயின் குடும்பம் பொருளாதார வசதியற்றது என்பதால், உயிர்காப்பு நிதிக்கு உதவவிரும்புவோர் சாவகச்சேரி இலங்கை வங்கியில் நோயாளியின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சேமிப்புக் கணக்கு, இல. 20399 இற்கு பணத்தை அனுப்பி வைக்கலாம் என்று சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் தெரிவித்துள்ளார். (கு)

# திருட்டு மின்சாரம் பெற்றவர்கள் தென்மராட்சியில் சிக்கினர்

இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரி மின் அத்தியட்சகர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது திருட்டு மின்சாரம் பெற்ற பலர் வகையாகச் சிக்கிக் கொண்டனர். கடந்த 26ஆம் திகதி கைதடி, நுணாவில், மட்டுவில் தெற்கு, மட்டுவில் ஆகிய பகுதிகளில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற 12 பேர் பிடிக்கப்பட்டனர்.

இலங்கை மின்சாரசபை சாவகச்சேரி மின் அத்தியட்சகர் எஸ்.சடாச்சரமூர்த்தி தலைமையில் சென்ற ஊழியர்கள், சாவகச்சேரி பொலீஸாரின் உதவியுடன் நடத்தப்பட்ட திடீர் முற்றுகையில் பெருமளவு வயர் மற்றும் மின் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மின் கம்பத்தில் இருந்து வயரினைப் பொலித்தீன் உறையினால் சுற்றிப் பாதுகாப்பான கவசமிட்டு நிலத்தில் புதைத்து மின்சாரம் பெறப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 250 மீற்றர் தூரம் வரையான வயர் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட வயர்கள், மின் உபகரணங்கள் பொலீஸாரால் கொண்டு செல்லப்பட்டன.

பொலீஸாரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வயர்கள் ஒப்படைக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். சம்பவத்தை விசாரித்த சாவகச்சேரி மாவட்ட நீதிவான் திருட்டு மின்சாரம் பெற்றவர்களில் ஒருவரை 5 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும், 4 பேரை 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் செல்லுமாறு உத்தரவிட் டார்.

மிகுதி 6 பேரில் ஒவ்வொருவரும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்த வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (கு-31)

## உதயவாக்கு

மற்றவர்களுடைய துயரத்தைக் கண்டு இரக்கப்படுங்கள். ஆனால், உங்களுடைய சொந்தக் கஷ்டங்களை உங்களிடமே வைத்திருங்கள்.

– ஆக்டன் பிரபு.

## நாளை

சித்திரை 20
வெவ்வாய்க்கிழமை
03.05.2005
திதி : தசமி
முன் இரவு 08.11 வரை
நட்சத்திரம் : சதயம்
முன் இரவு 09.16 வரை
திருநாவுக்கரசர் குருபூசை
சுபநேரம் : 10.26 - 11.56
[illegible]: 02.56 - 04.25
[illegible]

# இம்மாதம் 18-24 ஆம் திகதிவரை பாடசாலைகளில் தர்ம வாரம்

வலிகாமம்,மே 2

இந்த மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதிவரை பாடசாலைகளில் தர்ம வாரமாகப் பிரகடனப்படுத்தி அது தொடர்பான நிகழ்வுகளை நடத்துமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சகல சமயங்களுக்கும் ஏற்புடையதாகப் பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் சமய வழிபாட்டுத் தலங்களை தொடர்புபடுத்த இந்தத் தர்மவார நிகழ்ச்சிகளை நாடளாவிய ரீதியில் நடத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் அறிவித்துள்ளார்.

தர்மவார நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குப் பொருத்தமான பொதுநிகழ்ச்சித் தி[illegible]த்துக்கமைய வேலைத் திட்டத்தை தயாரித்துக்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

பொது நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைவாக மே 18 ஆம் திகதி பாடசாலை சுற்றாடலை தூய்மையாக்கல், போஷித்தல், பாதுகாத்தல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலைச் சுற்றாடல், தோட்டங்கள் என்பன அன்றைய தினத்தில் சுத்தம் செய்யப்படும்.

மே மாதம் 19ஆம் திகதி வழிபாட்டுத் தலம், ஆஸ்பத்திரி, முதியோர் இல்லம் போன்றவற்றில் ஒன்றைத் தெரிவுசெய்து [illegible] சிரமதான வேலைகள் முன்னெடுக்கப்படும்.

20 ஆம் திகதி மாணவர்களின் ஆன்மீக மற்றும் ஒழுக்க மேம்பாட்டு விருத்திக்கான பேச்சு, கட்டுரை, சித்திரப் போட்டிகள் ஒழுங்குசெய்யப்படும்.

21 முதல் 24 வரை சமய ரீதியான நிகழ்ச்சிகள் நடத்தப்படும். (கு-152)

# சாவகச்சேரி அபிவிருத்தி குறித்து ஆராய்வு

சாவகச்சேரி நகரசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியை அபிவிருத்தி செய்வது தொடர்பாக சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இக்கலந்துரையாடலில் ஜப்பான் உதவி வழங்கும் அபிவிருத்தி நிதியத்தின் ஆலோசகரும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான ஒஸ்ரின் பெர்னாண்டோ, ஜப்பான் உதவி வழங்கும் அபிவிருத்தி நிதியத்தைச் சேர்ந்த சிறிசேனா, யாழ். செயலக அதிகாரி எஸ். கந்தசாமி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஒஸ்ரின் பெர்னாண்டோ, சிறிசேனா, ந.ரவிராஜ், செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். நகர அபிவிருத்தி தொடர்பாக இதில் விரிவாக ஆராயப்பட்டது. (கு-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடம் வாடகைக்கு

மனோகராச் சந்திக்கு அருகில் பதினெட்டு அறைகளும் நான்கு விசாலமான மண்டபங்களும், நான்கு குளியலறைகள் வசதியும் சிறிய ரக வாகனத் தரிப்பிடமும் கொண்ட சகல வசதிகளும் உடைய தொடர் மாடிக் கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு. இரு பிரிவுகளாகவும் வழங்கப்படும். பாரிய வாகனத் தரிப்பிடமும் அருகில் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: உரிமையாளர் க.பாலயோகன்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

1. 021 222 7085
2. 0777162428
3. 021 222 8039

(44886) (24-17-45)


# மானிப்பாய் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய கட்டடம்

வலி.தென்மேற்கு,மே2

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த மாதம் 22ஆம் திகதி சங்கத் தலைவர் மா.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை சம்பிரதாய முறைப்படி நட்டார். யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் செயலாளர், கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ்வைபவத்தில் கலந்துகொள்டனர். (ஐ-135)


## 30.04.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

සනිදා වාසනාව
சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300229595 இலிருந்து 300246708 வரை

சீட்டிழுப்பு இல. 1602

சுப்பர் எண்

10 30 50 64 02

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.45,02,450/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 45,02,450/- | 45,02,450/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 30 | 5,000/- | 1,50,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 453 | 1,000/- | 4,53,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,443 | 500/- | 7,21,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,020 | 40/- | 8,80,800/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,997 | 20/- | 4,19,940/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,12,997 | 10/- | 31,29,970/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 1,17,57,660/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 20,00,000/-

தொடர் இல. 200265869 க்கு மேற்பட்ட ஜாதா நிற டிக்கட்டுக்கள் 2005 மே 04 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

300230046-3-15
300231461-3-41
300233222-9-98
300240525-2-80
300232345-8-32

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


# இரண்டாவது பிறந்ததின வாழ்த்து



பிரான்ஸில் வசிக்கும் கொயன்ஸ் மேரி கிறசென்சியா தம்பதிகளின் செல்வப் புதல்வி

## எஸ்தர்

தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (02.05.2005) திங்கட்கிழமை பிரான்ஸில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை பிரான்ஸில் உள்ள அன்பு அப்பா, அம்மா, அண்ணன் (எனோஸ்), யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பம்மா (லோறன்ஸ் மரியப்பிள்ளை), அம்மப்பா (தங்கராஜா), அம்மம்மா (ஆசைக்கிளி), நோர்வேயில் வசிக்கும் நிக்சன் மாமா, மாமி, மச்சான்மார், யூடி மாமா, லண்டனில் வசிக்கும் மதன் பெரியப்பா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பெரியமாமா, மாமி, மச்சான், பெரியம்மாமார், மாமாமார், பேழிப்பூட்டி, லண்டனில் வசிக்கும் சின்ன மாமி, மச்சாள், பிரான்ஸில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சகோதரர்கள், ஆசைமாமி, மாமா, மச்சான், மச்சாள்மார், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தாத்தாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், சித்திமார், சித்தப்பாமார், சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கர்த்தர் கிருபையில் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

T.P.: 021 222 3693

(சி-42610)(38-17-45-24)

இலக்கம் 99. பாங்சால் வீதி. யாழ்ப்பாணம்.

தகவல் தருபவர்: சவிரியான் தங்கராஜா (அம்மப்பா).

# நூல்கள் அன்பளிப்பு

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு உப அலுவலகப் பொது நூலகத்தின் வாசகர் வட்ட உறுப்பினர்களால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் மற்றும் ஒலி, ஒளி நாடாக்கள் என்பன மேற்படி நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

நூலகத்தின் வளர்ச்சியினை கருத்திற்கொண்டு உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் அனலை தீவு பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களினாலும் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் பெற்ற பணத்தினைக் கொண்டு ஒரு தொகுதி நூல்கள் வாசகர் வட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, அனலைதீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களால் வாசகர் வட்டத்தின் ஊடாக பல ஒலி, ஒளி நாடாக்களும் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (த-16)

# சண்டிலிப்பாய்க்கு புதிய பிரதேச செயலர்

வலி.தென்மேற்கு,மே2

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலராகக் கடமையாற்றிய ஆ.சுப்பிரமணிய சர்மா இம்மாதம் (மே மாதம்) முதல் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மீள்பதவி நியமனம் பெற்று அவர் அங்கு கடமையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சில் கடமையாற்றும் திருமதி ரூபினி வரதலிங்கம் இம்மாதம் முதல் வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுள்ளார். (ஐ-135)

# மரண அறிவித்தல்

## அருளானந்தசாமி மேரி லோகநாயகி

(செல்லாக்கா)



வல்வெட்டித்துறை, சிவபுர வீதியைப் பிறப்பிடமாகவும், "ராஜ்மஹால்" 107, டேவிற் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி லோகநாயகி 27-04-2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமுத்து செல்லக்கண்டு - செல்வநாயகம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற அருளானந்தசாமியின் அன்பு மனைவியும் A.G.செல்வராஜா (செல்வம் - எண்ணைக்கடை, திருநெல்வேலி), A.P.உலகராசா, A.யோசெப் இரத்தினராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வேஜினியா (ஜெயா) காலஞ்சென்ற தங்கராணி மற்றும் றோகினி, புஸ்பராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான அன்னபூரண ராசநாயகம் (பீற்றரம்மா), வேதநாயகம், ஆனந்தநாயகி, குணநாயகம் மற்றும் லூர்துநாயகி ஆகியோரின் அருமைச் சகோதரியும் மேரி அன்னா (பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனம்), தங்கராஜா (சூட்டா லண்டன்), வதனராஜா, நிமல்ராஜா (புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கள்), கொண்பியுசியஸ் (ஆஸ்திரேலியா), லூர்து பொப்சி, நிஷாந்தன், துஷியங்கா, துஷிகரன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02-05-2005) திங்கட்கிழமை பிற்பகல் 3.30(பு.நே) மணிக்கு டேவிற் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ராஜ் மஹால்"*
*107, டேவிற் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(44883)(46-17-45-24)

தகவல்:
A.G.செல்வராசா
(செல்வம் - மகன்).

# 31ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் மலர்வு: 05 03 1949

விண்ணில் மலர்வு: 02 04 2005



அமரர்

## வைத்திலிங்கம் லோகேஸ்வரன்

(இளைப்பாறிய மின் அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை)

ஊராண்ட உத்தமனே! உயர்ந்த மைந்தா!
உவப்போடு நான்பெற்ற துரையே! எந்தன்
பேராண்ட பொக்கிஷமே! பெருமை பெற்ற
பேசரிய தவப்பயனே! எங்கே சென்றாய்?
எம்குலத்தில் முதல் உதித்த சூரியனே! சுடரே! நம்
குடும்பத்தை கோபுரமாய் உயர்த்திய உத்தமனே!
உன் சிம்மக்குரல் எங்கே? சிரித்த வதனமெங்கே?
எம் அறிவுக் கடலின் அலையோசை அடங்கிற்றோ?
ஆண்டவன் அடியில் அமைதி பெற்றிடுவாய் மகனே!

எமது அன்புச் சகோதரனின் நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று (02-05-2005) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அதில் பங்குகொண்டு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கருணாலயம்"
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

உங்கள் நினைவால் வாடும்:
தந்தை, சகோதரி,
திருமதி ஞானேஸ்வரி.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 18-03-1934

மறைவு: 05-05-2002



அமரர்

## நாகமணி ஐயாத்துரை

திதி: 02-05-2005

தீராத வேதனையால் தினந்தினம் துடிக்கின்றோம்
மாறாத சோகத்திலே மூன்றாண்டுகள் கழிந்தனவே
வேராக நீரிருந்த எம் குடும்பம் இன்று உம்மை
நினைத்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றது!

- குடும்பத்தினர்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(44882)(24-17-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழரின் பண்பாட்டு வேரில் இருந்து வளர்ச்சி பெற்றதே கூட்டுறவு சமாசம்

## மகளிர்தின விழாவில் பத்மினி சிதம்பரநாதன்

யாழ்ப்பாணம்,மே 2

தமிழர் பண்பாட்டு வேரில் இருந்து தோற்றம் பெற்ற ஓர் அரசசார்பற்ற அமைப்புத்தான் கூட்டுறவு சமாசம். எனவேதான் அது எமது பண்பாட்டோடு நிற்கின்றது; எமது சமூகப் பிரச்சினைகளுடன் ஊடாடுகின்றது.

- இப்படித் தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

யாழ்.மாவட்டச் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மகளிர் குழு ஏற்பாடு செய்த பெண்கள் தினவிழா கடந்த 23 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் திருமதி கௌசல்யா கார்த்தீபன் தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பத்மினி சிதம்பரநாதன் உரைநிகழ்த்தினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

யுத்தம் காரணமாக கடந்த 20 வருடங்களாக எங்களுடைய பொருளாதாரம் அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து சின்னாபின்னப்பட்டு இருக்கும்போது பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களை மீளக் குடியமர்த்தவும் புனர்வாழ்வு அழிப்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டன. அதனுடன் இக்கூட்டுறவு அமைப்பின் கட்டமைப்பை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரசசார்பற்ற நிறுவனங்கள் 2 வகையாக இருக்கின்றன. ஒன்று உள்ளூரில் தோற்றம் பெற்ற அரசசார்பற்ற நிறுவனங்கள், அடுத்து சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள். சுனாமிக்குப் பின்னர் இவை இன்னும் பாரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளன. இதனுடன் கூட்டுறவு சமாசத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமது பண்பாடு வேரில் இருந்து கிளர்ந்தெழுகின்றபடியால் இன்றைக்கும் பண்பாட்டோடு நிற்கின்றது; எமது சமூகப் பிரச்சினைகளுடன் ஊடாடுகின்றது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மிக நெருக்கடியான காலகட்டத்தில் பல்வேறு நன்மைகளைச் செய்தன. எனினும். ஓர் ஆபத்தையும் நாங்கள் அவதானிக்கிறோம். இவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாதென்றும் தாம் நடுநிலையாளர்கள் என்றும் சொல்லிக்கொண்டு இன்றைக்குச் சமூகத்திற்குத் தேவையான பணிகளில் இருந்து ஒதுங்கிக்கொள்கின்றார்கள். உண்மையில் நடுநிலை என்று ஒன்று இல்லை. ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் ஒரு பெரும் தேசிய இனவெறியிலிருந்து அதாவது, சிங்கள தேசிய வெறியிலிருந்து தன்னைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருக்கின்றது. அரசசார்பற்ற நிறுவனங்கள் - அதுவும் தமிழ்ச் சமூகத்தில் தோன்றும் நிறுவனங்கள் இதில் எந்தப் பக்கம் என்பதைத் தீர்மானிக்க வேண்டுமே தவிர நடுநிலைமை வகிப்பதாகக் கூறித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளக் கூடாது. அரசசார்பற்ற நிறுவனங்கள் எமது பண்பாட்டில் இருந்து தோன்றாதபடியால் இந்தப் பிரச்சினை வருவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, அவர்கள் கூட்டுறவு அமைப்பு போன்ற எமது பண்பாட்டில் இருந்து கிளர்ந்த நிறுவனங்களுடன் ஊடாடி அந்நியமாகாத தன்மையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் - என்றார் பத்மினி சிதம்பரநாதன்.

செல்வி கயல்விழி பேசும்போது கூறியதாவது:-

நல்ல பிரஜையை உருவாக்கும் பணியில் பெண்களின் பங்கு அளப்பரியது. சமூகத்தில் எமக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுககு உட்படாது நாமே எம்மைப் பாதுகாக்க வேண்டும். ஒரு தாய் பிள்ளைகளின் வெளித்தேவைகளைக் கவனிப்பதுடன் நில்லாது, அவர்களின் உள்ளத்தை உணர்ந்து கடமைகளைச் செய்ய வேண்டியது அவசியம்.

ஆளுமையுள்ள தாயின் வழிநடத்தலைப் பிள்ளைகள் நம்பிக்கையுடன் பின்பற்றுவார்கள. தாயின் அரவணைப்பில் இருந்து விலகிச் செல்லும் பிள்ளைகள் தான் அதிகம் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். பிள்ளைகளைச் சிறந்த மனிதர்களாக உருவாக்கும் அறிவை வழங்க வேண்டியது பெண்களின் பாரிய பொறுப்பாகும்.

ஒரு தேசத்தை அமைக்கும் வெற்றியின் இறுதிக்கட்டத்தில் நாம் இப்போது நின்று கொண்டிருக்கின்றோம். ஊனமற்ற சமூகம் தோன்றாமல் நிறைவான சமூகம் உருவாக வழியமைக்க வேண்டியது பெண்கள் ஒவ்வொருவரினதும் பணியாகும்.

பல சமூக ஒழுக்கச் சீர்கேடுகளால் [illegible] பெண்களும் சிறுவர்களும் பாதிக்கப்படு[illegible]ர்கள். பெண்கள் ஆண்களுக்கு நிகராகச் சரியான தலைமைத்துவம், ஆளுமை நிறைந்தவர்களாக மனோதிடம் பெற்று அச்சிரமங்களுக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும். ஒழுக்கமும் பண்பாடும் நிறைந்த எமது இனத்தை அதன் கட்டுமானத்தைச் சிதைக்க வேண்டும் என்பதில் எதிரி அக்கறை கொண்டுள்ளான் வெளியில் இருந்து எமது இனத்தைச் சிதைக்க முயலும் எதிரியின் திட்டத்தை முறியடிக்கப் பெண்கள் சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் அமைதியான தேசத்தில் நிறைவான சமூகமாக வளர பெண்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ப-111-204)

# வறுமை தானாக வருவதில்லை அது உருவாக்கப்படுகின்றது

## ஊற்று நிறுவனப் பொறுப்பாளர்

வறுமை தானாக வருவதில்லை. வறுமை உருவாக்கப்படுகின்றது. மேற்கு நாடுகள் பல்வேறு உத்திகளைக் கையாள்வதால் இந்த நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு பணச் சுரண்டல் (MONETARY EXPLOITATSON) நூலை வெளியிட்டுப் பேசிய ஊற்று நிறுவனப் பொறுப்பாளர் க.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஏ.ஆர்..அருட்பிரகாசம் எழுதிய 'பணச்சுரண்டல்' ஆங்கில நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் நாவலர் காலாசார மண்டபத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெற்றது.

அந்த விழாவில் விக்னேஸ்வரன் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

எமது மூலப்பொருள்கள் சுரண்டப்பட்டு பின் அதிகவிலை கொடுத்து விற்கப்படுகிறது. உதாரணமாக றப்பரை நாங்கள் எடுத்துக் கொள்ளலாம். வறுமை ஒழிப்புச் செய்யும்போது யதார்த்தம் உணரமுடிகிறது. நாடு முன்னேற சர்வதேச பொருளாதார ஒழுங்கு அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குச் சாதகமாய் அமைய வேண்டும்.

ஆனால், அது சாதகமாக இல்லை. மேற்கு நாடுகளை நம்பமுடியாது என்பதால் இன்று வறுமையை ஒழிக்க எல்லாநாடுகளும் சேர்ந்து உழைக்கவேண்டும். அதற்குச் சாதகமான சிந்தனைகள் இந்தநூலில் தரப்பட்டுள்ளது. எம்மைப் பொறுத்தவரை சமூக மூலதனம் ஏற்படுத்தப்படவேண்டும். பல வடிவங்களில் வரும் சுரண்டலுக்குத் தீர்வு காணாவிடில் எமது முன்னேற்றம் ஓர் எல்லைக்குமேல் கொண்டு செல்ல முடியாது. 2003இல் நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணத்தைக் காட்டி ரூபா 1000மில்லியனைப் பெற்றுக்கொண்டது. ஆனால், இங்கு செலவிட்ட தொகை 110மில்லியன் மட்டும். அபிவிருத்திகள் ஒரு பணியில் நடக்க நாங்கள் இன்னொரு பணியில் செயற்படுவதன் மூலம் நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். சுனாமிக்குப் பின் வியாபாரம் பெருகிவிட்டது. தங்களது வியாபாரத்துக்கு வாய்ப்பான இடமாக நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதனால், உண்மைப் பயனாளிகள் மக்களா? நிறுவனங்களா? என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த நூலில் கூறப்பட்ட கோட்பாடுகளை முன்னெடுத்துச் செயற்பட நாங்கள் உதவுவோம் - என்றார்.

கலாநிதி குணராசா தனது தலைமையுரையில் கூறியதாவது:-

சென்னையில் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குப் போன சமயத்தில் இந்த நூலாசிரியர் அருள் எனக்கு அறிமுகமானார். அவர் ஓர் இலக்கியவாதி. அவர் எழுதிய 'லங்காராணி' நாவல் எனற சம்பிரதாய இலக்கிய வரம்புக்குள் அடங்காத நாவல் வடிவம். ஆனால், இந்த நூல் ஈழத்துப் போராட்ட' வரலாற்றின் ஒரு மைல்கல. 1977இல் இனக்கலவரம் ஏற்பட்டு, கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எமது மக்கள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த மூன்று நாள் வரலாற்றை அவர் அதில் எழுதியுள்ளார். முதலாவது போராட்ட நாவல் 'லங்காராணி'தான்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்த நிறுத்தம் இடம்பெற்று சமாதானம் வந்தது. சுனாமியும் கூடவே வந்துள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்களின் சம்பளம் அதிகமாகக் காணப்படுகிறது. மாநகரசபைக்குத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்பட்டனர். ஆனால, அவர்கள் எதிர்பார்க்கும் சம்பளம் கிடைக்காது என்பதால் வேலைக்குவர விரும்புகிறார்கள் இல்லை. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அபிவிருத்திக்கெனக் கூடுதல் பணம் கிடைக்கிறது இருந்துமென்ன? கிள்ளிக்கொடுத்துவிட்டு அள்ளிக்கொண்டு போகிற சூழ்நிலைக் கைதித்தன்மையில் இருந்து விலகமுடியாமல் இன்று அவர்களின் உதவி தேவைப்படுகிறது. தமிழ் நாட்டில் ஜெயலலிதா செய்வது போல் செய்ய முடியாது. அதற்கான விடைகள் இந்த 'பணச் சுரண்டல்' நூலில் உண்டு - என்றார்.

மகளிர் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், நூலாசிரியர் அருட்பிரகாசம், பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேரின்பநாதன், பேராசிரியர் நித்தியானந்தன் ஆகியோர் பேசினார்கள்.

ஊற்று நிறுவனப் பொறுப்பாளர் விக்னேஸ்வரன் நூலை வெளியிட்டு வைத்தார். (ப-111)




# பாதுகாக்க வேண்டிய அரசு பாரபட்சம் காட்டுவது வேதனையாகும்

## எஸ். பாலையா தெரிவிப்பு

கரவெட்டி,மே2

நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேணடிய அரசு தமிழ் மக்களைப் புறக்கணித்து பாரபட்சம் காட்டுவது வேதனைக்குரிய விடயம்.

இவ்வாறு சுனாமி அனர்த்த செயலணிப் பணிமனைப் பொறுப்பாளர் எஸ்.பாலையா தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட துமபளை கிழக்கு மக்களுக்குத் தற்காலிக வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அங்கு உரை நிகழ்த்திய பாலையா மேலும் தெரிவிக்கையில்:-

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. இலங்கைக் கரையோரப் பகுதியல் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு கிழக்குத் தமிழர்கள்.

சர்வதேசத்திடமிருந்து அதிக உதவிகளை எமது அரசு பெற்ற போதும் தமிழர்களுக்கு முழுமையாக அவை கிடைக்கவில்லை. இது வேதனைக்குரிய விடயம்.

இன்று சர்வதேச ஊடகவியலாளர்களும் பிரதிநிதிகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டு அறிந்து வெளிஉலகத்திற்கு வெளிப்படுத்துகிறார்கள். இதன்மூலம் சர்வதேசத்திற்கு எம்மக்களின் தேவைகள் தெரியப்படுத்தப்படுகின்றன.

எமக்குக் கிடைக்கும் வளங்களைக் கொணடு எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இதன்மூலம் எம்மை நாமே வளர வைக்கலாம் - என்றார். (ப-70-204)

# முதல் திருப்பலியை நிறைவேற்றிய குருக்களுக்கு வரவேற்பு

தேவ அழைத்தல் உருவாகுவதற்கு குடும்பத்தின் பின்னணி, அக்குடும்பத்தில் முன்னர் ஏற்பட்ட தேவ அழைத்தல்களும் உந்து சக்தியாக இருப்பதை நாம் மறுக்கமுடியாது.

குருநகர் பங்கைச் சேர்ந்த அருட்திரு. தாசீசியஸ் நிரூபன் நிசானந் அடிகளாரின் முதற் திருப்பலி நிறைவில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் தலைமையுரையாற்றிய குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

அ.அன்ரன் ஸ்ரீபன், யே.மதி இளம்பரிதி, ம.வி.தயாகரன், தா.நிரூபன் நிஷானந், ஆ.அன்ரன் புனிதகுமார் மற்றும் யோசப் யுவனல் கமலானந்தன் ஆகியோர் குருக்களாக யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் திருநிலைப் படுத்தப்பட்டது அறிந்ததே.

இவர்களில் அருட்திரு. தாசீசியஸ் நிரூபன் நிசானந் அடிகளார் தமது முதலாவது திருப்பலியைக் கடந்த 24 ஆம் திகதி காலை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நிறைவேற்றினார்.

இத்திருப்பலியைத் தொடர்ந்து ஆலய முன்றிலில் குருநகர் மக்களால் புதிய குருவானவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிகளார் தொடர்ந்து தமதுரையில் தெரிவித்ததாவது:-

எமது பங்கு ஒரு பாரிய பங்கு. இங்கு பன்னிரண்டு குருக்கள் அல்ல இன்னும் பல குருக்கள் துறவிகள் உருவாகமுடியும் இன்றைய காலகட்டத்தில் குருக்களுடைய சேவை மிகவும் வலிமையாக இருக்கிறது. எனினும், இவர்கள் உலகத்தில் பலவிதமான சவால்களையும் ஏற்று வாழவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இன்றைய காலம் சவால்கள் நிறைந்துள்ளதாக உள்ளது. சவால்களின் மத்தியில் ஈடுகொடுக்கின்ற சிரத்தை, ஆழமான ஆன்மீக உருவாக்கம், ஆன்மீகத் தெளிவு, ஆன்மீக ஆளுமை இருக்கின்றபோதுதான் இந்த மண்ணிலே செவ்வனே கடமையைச் செய்யக் கூடியதாக இருக்கும்.

எனவே, இன்றைய நாளிலே தமது முதற் திருப்பலியைத் தனது மண்ணில் நிறைவேற்றிய அருட்தந்தை தாசீசியஸ் நிரூபன் நிசானந்தை மகிழ்சியுடன் வரவேற்று அவரை வாழ்த்துகிறோம். நீதியோடும் நேர்மையோடும் இறைபணியாற்ற அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்க வேண்டும். இந்தப் புதிய குருவான நிரூபன் நிசானந் பெற்றோருக்கு உரியவரல்லர். இறைவனுக்கே சொந்தமானவர். அவர்களுடைய உறவு இருந்தாலும் அவரது பணியும் சேவையும் திருச்சபைக்கும் திருச்சபையின் பல்வேறு பணிகளுக்கும் ஒப்புவித்த சேவையாக அவரது வாழ்வு தொடர்கிறது.

இன்றைய காலகட்டத்தில் திருச்சபைக்கு குருக்களுடன் இணைந்து பணியாற்ற பொது நிலையினரும் அழைக்கப்பட்டுள்ளார்கள். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வெளிநாட்டுகது அனுப்பவிரும்புவதுபோல இறை சேவைகுத் தமது பிள்ளைகளை அனுப்பமுன்வர வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், குருக்கள், அருட்சகோதரிகள், நலன்விரும்பிகள் ஆகியோர்களும் பெருமளவில் கலந்துகொண்டார்கள். புதிய குருக்கள் அறுவரும் புனித யாகப்பர் ஆலய முன்வாயிலில் பான்ட் வாத்தியம் சகிதம் ஆலயத்துக்கு அழைத்துவரப்பட்டார்கள். திருப்பலி நிறைவில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் வரற்வேற்புரையை ஆலய பங்குச் சபையின் சார்பில் கிராமசேவையாளர் செ.யூலன், வாழ்த்துரைகளை ஆசிரியை திருமதி மே.பிலிப், ஆசிரியர் எஸ்.கிறிஸ்ரியன் ஆகியோர்களும் நன்றியுரையை ஆசிரியை திருமதி செ.யூஜினும் நிகழ்த்தினார்கள். சிறுவர், சிறுமியர்களின் நடன இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ப-51-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருஜி ஸ்ரீ ஸ்ரீரவிசங்கர்

அவர்களின்
150 நாடுகளில் நடக்கும்

## வாழும் கலைப்பயிற்சி

★ மன அமைதி, மன உளைச்சல் நீங்கி, தெளிந்த மனம், அமைதி, தன்னம்பிக்கை வளர...
★ இரத்தக்கொதிப்பு, ஆஸ்துமா, நீரிழிவு, ஒற்றைத் தலைவலி போன்றவை நீங்கி உடல் ஆரோக்கியம் பெற...
★ தன்சக்தி அறிந்து, உள்ளுணர்ந்து, ஆன்மீக வழியில் வளர்ந்து, ஊக்கமும், உற்சாகமும் நிறைந்து செவ்வனே பணிசெய்யவும அனைவரும் மேற்கொள்ளவேண்டிய பயிற்சி.

## இலவச அறிமுக உரை

இன்று திங்கள் (02.05.2005) மாலை 6 மணிக்கும்
பயிற்சி நாள்கள்: 03.05.2005 முதல் 08.05.2005 வரை
தனிவகுப்பு காலை 6 மணிமுதல் 8 மணிவரை
தனிவகுப்பு மாலை 6 மணிமுதல் 8 மணிவரை
(புதிய நேரம்)
இடம்:
இந்துசமயப் பேரவை, தலைமைச் செயலகம்,
144(51), பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம
தொலைபேசி எண்: 222 6048, 0779059549,
0779059544.
(44799)(50)

## சிறுவர் அரங்கப் பயிற்சிப் பிரிவு ஆரம்பம்

### செயல்திறன் அரங்க இயக்கம்
### Active Theatre Movement

புதிதாக ஆரம்பிக்கவுள்ள சிறுவர் அரங்கப் பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

⇨ பயிற்சிக்காலம்: 04 மாதங்கள்
(கிழமை நாள்களில் விரிவுரைகள் நடைபெறும்)
⇨ பயிற்றுவிப்பாளர்: கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம்
➤ பயிற்சி முடிவில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவோர் தொழில் சார் ஆற்றுகையாளராக இணைத்துக்கொள்ளப்படுவர்.
⇨ பாடவிதானம்
▲ சிறுவர் நாடக எழுத்துருப்படைப்பாக்கம்
▲ நடிகருக்கான அடிப்படைப் பயிற்சி
▲ சிறுவர் நாடகத் தயாரிப்பு

எதிர்பார்க்கப்படும் தகுதி:
▲க.பொ.த. (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்
▲வயதெல்லை 18 - 35
▲ நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தி, அனுபவம் விஷேட தகுதிகளாகக் கருதப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 10-05-2005**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
செயல்திறன் அரங்க இயக்கம்
**Active Theatre Movement**
"அருளகம்" ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(சி-42609)(26-14-45)

## நீங்காத நினைவில் ஒன்பதாம் மாதம்



**திருமதி சேதுநாயகி வைரமுத்து**
திதி: 02-05-2005

இகத்தில் 18-10-1940
பரத்தில் 09-08-2004

ஒன்பதே எண்ணாக உலகில் மலர்ந்தனையே!
ஒன்பதில் தவறாது உலகைவிட்டு மறைந்திட்டாய்!
ஒன்பதாம் மாதமின்று ஓடோடி மறைந்ததம்மா!
அன்பிற் கனிகலமே! ஆதரவு தருவதற்கு
உன்போல் எவருமிலர், ஏனிந்த மௌனம் அம்மா!
துன்பிற் தவிக்கின்றோம் தேற்றுவார் யாருளரோ?
என்றும் நாம் உந்தனது புகழுடம்பின் சாயலதை
நன்றாகக் காண்கின்றோம் நாதன் திருவடியில்
ஒன்பது வரிவழியில் இம்மலரே காணிக்கை!
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

மீசாலை மேற்கு,
மீசாலை.
(44719)(46-14-45-26)
- குடும்பத்தினர்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே2

தெல்லிப்பழை அருள்மிகு காசி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா கடந்தவாரம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்த உற்சவத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (3-203)

★ ★ ★

நவாலி, மே2

நவாலி ஸ்ரீ சித்தாமணிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

உற்சவத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-100-204)

# படையினர் சிரமதானம்

தென்மராட்சி,மே2

சாவகச்சேரி நகரசபை பொதுவிளையாட்டு மைதானம், மாவட்ட வைத்திய சாலை ஆகிய இடங்களில் படையினர் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (3-117)

# சேதமடைந்த கட்டடங்களை அகற்றப் பணிப்பு

சாவகச்சேரி, மே2

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சேதமடைந்த நிலையில் காணப்படும் வைத்திய அதிகாரி விடுதி, வாகனத் தரிப்பிடம், சமையலறை, சிற்றுண்டிச் சாலை, பதிவு வைத்திய அதிகாரி விடுதி ஆகிய கட்டடங்களை அகற்றி விடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இந்த உத்தரவைச் சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி செ.அமபிகைபாகனுக்கு அனுப்பிவைத்துளளார். இதனையடுத்து கட்டட இடிபாடுகளை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (3-31)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,மே2

ஈழத்து இராமேஸ்வரம் என்றழைக்கப்படும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் கோயில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும் சித்திரத்தேர் மலர் வெளியீடும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 7 மணிக்குச் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும் பிற்பகல் 11 மணிக்கு இரதோற்சவமும் இடம்பெறும்.

தொடர்ந்து நல்லை ஆதீனமுதல்வர், மஹோற்சவக் குருமணி ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெற்று சித்திரத் தேர் மலர்வெளியீடு இடம்பெறும்.

பேராசிரியர் கா.குகபாலன் நூலை வெளியிட்டுவைக்க அதன் முதற்பிரதியை நமசிவாயம் காராளபிள்ளை பெற்றுக் கொள்வார். நூலின் மதிப்பீட்டுரையை பேராசிரியர் வி.சிவசாமி நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் 40 வருடகால சிவப் பணியையும் 25 வருடகால ஆசிரியப் பணியையும் நிறைவுசெய்யும் அதிபர் ந.இராசதுரையைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (3-203)

# மாநகரசபைப் பகுதியில் விலங்குத் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்,மே2

மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்பபு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுபபு ஊசிகள் போடப்படவுள்ளன.

உரியவர்கள் தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசிகளைப் போட்டுப் பயனடையுமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

தடுப்பூசி போடப்படவுள்ள திகதி, நேரம், இடம் பற்றிய விவரங்கள் வருமாறு:-

நாளை - வண்ணார்பண்ணைப் பகுதியில் - காலை 8மணி - வள்ளுவன் சனசமூக நிலையம், முற்பகல் 10.30 மணி - காமாட்சி சனசமூக நிலையம், பிற்பகல் 2 மணி - நீராவியடி சைவ பரிபாலன சபை மண்டபம்.

எதிர்வரும் 4ஆம் திகதி காலை 8 மணிக்கு - பிறவுண் வீதி ஞானக் குழந்தை பாலர் பாடசாலை அருகில், முற்பகல் 10.30 மணிக்கு - கில்னர் லேன் பாலர் பாடசாலை, பிற்பகல் 2 மணிக்கு - ஆத்திசூடி ச.ச.நிலையம்.

5ஆம் திகதி காலை 8மணிக்கு - ஆறுகால்மடம் அறிவொளி ச.ச.நிலையம், முற்பகல் 10.30 மணிக்கு - அண்ணா ச.ச. நிலையம், பிற்பகல் 2 மணிக்கு - கொட்டடி ச.ச.நிலையம்.

10ஆம் திகதி காலை 8 மணிக்கு - சென் நீக்கலஸ் ச.ச.நிலையம், முற்பகல் 10.30 மணிக்கு - ஒஸ்மானியாக் கல்லூரி, பிற்பகல் 2 மணிக்கு - நல்லூர் தெற்கு ச.ச.நிலையம். (3-204)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 02 - 1935
உதிர்வு 05 - 05 - 2002



**திருமதி கனகரெத்தினம் தவமணி**
திதி: 02-05-2005

மூன்றாண்டுகள் சென்றாலும்
அம்மா உங்கள் பிரிவை மறக்கமுடியாது
தினமும் மனக்கண்முன் நின்று
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்!

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சுதா வெதுப்பகம்"
சரவணை கிழக்கு,
வேலணை-9.
(44832)(46-14-45-26)

## 2ஆம் ஆண்டு நினைவுப்பூக்கள்

அன்னையின் மடியில் 1977 – 05 – 25
வேடனின் வலையில் 2003 – 05 – 02



**திருமதி திலகராஜா ஜெகத்ஜனனி (ஜனா)**
(சமுர்த்தி அ/தி. உத்தியோகத்தர் - J/51,52)

உன் கூடு தேடி நீ தனியே ஓடிவந்த போது
பாதையில் வைத்து உன் வாழ்க்கையை
பாதியில் பறித்தானோ கொடிய வேடன்?
நின்றுகொல்லும் தெய்வமும்
தர்மம் காக்கும் சட்டமும் வந்து
உனக்கு நியாயம் தரவேண்டாமம்மா – நீ
கடைசியாய் சுவாசித்த மூச்சுக்காற்று
ஓர் நாள் அந்த வஞ்சகனைச் சுட்டெரிக்கும்
அந்நாளுக்காக நொறுங்கிய
இதயத்தோடு நாம் காத்திருக்கிறோம்...

உன் நினைவால் தவிக்கும்:
பிள்ளைகள் துவாரகா, துஷானி,
மற்றும் குடும்பத்தினர்.

கரம்பொன் தெற்கு,
ஊர்காவற்றுறை.
(44741)(46-14-45-26)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 674 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 29-4-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5386644-5401705 |

வெற்றி இலக்கங்கள்
**02 34 36 55**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா.27,68,350/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,29,269 | 10/- | 32,92,690/- |
| 2.இலக்கங்கள் | 30,212 | 20/- | 6,04,240/- |
| 1.இல + லக்கினம் | 29,819 | 30/- | 8,94,570/- |
| 2.இல + லக்கினம் | 2,733 | 100/- | 2,73,300/- |
| 3.இலக்கங்கள் | 818 | 500/- | 4,09,000/- |
| 3.இல + லக்கினம் | 71 | 5,000/- | 3,55,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 27,68,350/- | 27,68,350/- |
| மொத்தம் | 3,92,932 | - | 1,00,49,400/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,00,49,400/-

தொடர் இல. 4452457 க்கு மேற்பட்ட நீலம் நிற டிக்கட்டுக்கள் 2005 மே 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5398161-7-36
5388892-0-49
5388094-2-56
5392748-1-11
5390014-4-87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகக் கலையை மேம்படுத்த அபாக்கஸ் கற்கைநெறி உதவும்

## அதன் இலங்கைப் பிரதிநிதி கூறுகிறார்

துரித வேகத்தில் வளர்ந்து வரும் இன்றைய நவீன யுகத்தில் சிறுவர்களிடம் ஞாபகக் கலையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றுகின்றது காமா அபாக்கஸ் அக்கடமி.

இப்படிக் கூறினார் அந்த நிறுவனத்தின் இலஙகைக்கான நிர்வாக இயக்குநர் கனகசபை நகுலநாதன்.

பிரபல அபாக்கஸ் கற்றைநெறி நிறுவனமான GAMA அபாக்கஸ் நிறுவனத்தின் செயற்பாடு பற்றிக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

"நான் கிளிநொச்சி நகரைச் சொந்த இடமாகக் கொண்டவன். 1981 இல் புலம்பெயர்ந்து இந்தியாவில் கேரளா மாநிலத்தில் வசித்து வருகின்றேன். அங்கு கராட்டி மாஸ்ராக உள்ளேன்.

எனது மூத்தசகோதரன் ஓமானில் உள்ளார். அவர்மூலம் GAMA நிறுவனத்துடன் எனக்குத் தொடர்புஏற்பட்டது. GAMA வின் தலைமை நிலையம் ஓமானிலேயே உள்ளது. இத்தாலி, மலேசியா, ஜேர்மனி, இந்தியா, இலங்கை போன்ற பல்வேறு நாடுகளிலும் GAMA விற்குக் கிளைகள் உண்டு.

மலேசிய நாட்டிலுள்ள குளோபல் அபாக்கஸ் நிறுவனத்துடன் நாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவிலும் இலங்கையிலும் GAMA அபாக்கஸ"க்கான நிலையங்களை ஆரம்பித்துள்ளோம்.

அபாக்கஸ் என்னும் போது அக்கருவியையும் அதனுடைய செயற்பாட்டையும் 2400 வருடங்களுக்கு முன்னரே ஜப்பான் நாடு கண்டுபிடித்து நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

படிப்படியாக பல்வேறு நாடுகளுக்கும் - தரத்துடன் பரவியது ஆரம்பத்தில் கணக்குப் பார்த்தலுக்குப் பயன்பட்ட அபாக்கஸ் இன்று ஞாபகசக்தியை வளர்த்து அதன் மூலம் கவனிக்கும் தன்மையை உருவாக்கி மூளைத்திறனை அதிகரிக்கச் செய்கின்றது.

அதாவது, இந்த அபாக்கஸ் கற்கும் மாணவன் ஆரம்பத்தில் அபாக்கஸ் கருவிமூலமும் 3 - 4 மாதத்திற்குப் பின் அக்கருவி இல்லாமலும் மனக்கணிதத்தையும், ஞாபகசக்தியையும் கூட்டுகின்றான்.

இதைக் கற்பனைத்திறன் விருத்திசெய்தல் என்றும் சொல்லலாம். அதாவது, ஒருவரை நாம் ஒரு வருடத்திற்கு முன் பார்க்கின்றோம்; அவரைப் பற்றி அறிகின்றோம்; மீண்டும் ஒரு வருடம் கழிந்து அவரைப் பார்க்கும் போது




அவரின் உருவம் ஞாபகத்தை உண்டாக்கும் ஆனால், அவரைப் பற்றிய விவரங்களை மறந்திருப்போம். இதையே நிழல்பட ஞாபக சக்தி என்கின்றோம். இந்த நிழல்பட ஞாபக சக்தியை வளர்ப்பதே அபாக்கஸ்.

அதாவது, அபாக்கஸ் கருவி மூலம் கணக்கிடத் தொடங்கும் பிள்ளை ஓரிரு மாதங்களின் பின் அந்தக் கருவை நிழல்படமாக மனதிலிருத்திக் கணக்கிடத் தொடங்கும்.

அதேபோல் கவனிக்கும் தன்மையையும் அபாக்கஸ் கருவி மூலம் உருவாக்கலாம். அதாவது, நூறு பொருள்களைக் கூட ஞாபகத்தில் இருததிக் கூறக்கூடிய தன்மையை உருவாக்குகின்றது.

இந்தியாவில் அபாக்கஸ் பற்றி ஆய்வு செய்வதற்கும் ஆள்கள் இருக்கிறார்கள். இந்த அபாக்கஸ் கற்றலினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து மேலும் அபிவிருத்திசெய்ய அவர்கள் முற்பட்டுள்ளனர்.

அபாக்கஸ் பற்றி ஒரு வார்த்தையில் சொல்வதாயின் ஞாபகக்கலை - ஒரு திறமை என்றே கூறலாம்.

**- தீபா**

GAMA அபாக்கஸ் நிலையங்கள் இலங்கையில் 14 இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 6 நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன.

வகுப்பில் 5 - 15 வயது வரையான பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுவர். ஒரு நிலையத்தில் 50 மாணவர்கள்வரை இருப்பர். அவர்களுக்குக் கிழமையில் 2 மணித்தியாலங்கள் வகுப்புகள் நடத்தப்படும்.

2 வருடங்களைக் கொண்ட இக்கற்றைநெறியில் இணையும் மாணவர்கள், 3 மாதங்களுக்கு ஒரு தடவை முன்னேற்றத்தை அறியும் பரீட்சை வைக்கப்பட்டே அடுத்த பகுதியைக் கற்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

- இவ்வாறு இந்த GAMA அபாக்கஸில் கற்கும் பிள்ளைகளின் ஞாபகக்கலையை வளர்ப்பதன் மூலம் அவர்கள் பரீட்சையில் தமது திறமையை வெளிப்படுத்துவதோடு வாழ்க்கையிலும் சுபீட்சத்தை அடைய முடியும் - என்றார் அவர். ★

# செலிங்கோ காப்புறுதிக் கிளை நெல்லியடியில் திறப்பு




செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் கிளை ஒன்று கடந்த புதன்கிழமை நெல்லியடியில் திறந்துவைக்கப்பட்டது. நிறுவனத்தின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் ஏர்வின் ஜெயவர்த்தனா நாடாவை வெட்டிக் கிளையைத் திறந்துவைப்பதையும் - நிறுவன அதிகாரிகள் கிளை அலுவலகம் முன்பாக நிற்பதையும் - படங்களில் காணலாம். *(படங்கள்: பிரபா)*

# மேற்குலக நாடுகளில் உயர்கல்வியை சட்டரீதியாகப் பெறுவதற்கு வாய்ப்பு

## ஆலோசனை வழங்குகிறது சாயி இன்ரநஷனல் நிறுவனம்

மேற்கு நாடுகளில் மக்கள் தங்கள் வேலை வாய்ப்பு மற்றும் உயர்கல்வி வசதிகளைப் பெறுவதற்குச் சட்டரீதியான ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைகளைப் பெற்றுத்தர வழிகாட்டியாக சாயி இன்ரநஷனல் நிறுவனம் விளங்குகின்றது.

அந்த நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளா எஸ்.பிரகலாதன் இப்படிக் கூறினார்.

1999 ஆம் ஆண்டு முதல் சாயி இன்ரநஷனல் கல்வி நிறுவனம் என்ற பெயரில் இயங்கி வந்த இந்த நிறுவனம் சர்வதேசத் தொடர்புகளை விஸ்தரித்து சாயி இன்ரநஷனல் நிறுவனம் என வளர்ந்து நிற்கின்றது என்று அவர் பெருமையுடன் கூறினார்.

மேற்குலக நாடுகளில் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பங்களை அறிவதற்காகவும் அத்துறையில் உயர்கல்வி வாய்ப்பைப் பெறுவதற்காகவும் வேலைவாய்புகளைப் பெறுவதற்காகவும் பொிய எண்ணிக்கையான மக்கள் அந்த நாடுகளுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

அவ்வாறு செல்பவர்கள் சட்டரீதியான ஏற்பாடுகளைப் புறம்தள்ளி செல்வதால் பல்வேறு சிக்கலகளை எதிர்நோக்குகின்றனர்.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு வழிகாட்டியாக இந்த நிறுவனம் செயற்படுகின்றது என்று கூறுகின்றார் பிரகலாதன்.

உயர்கல்வி வாய்ப்பைப் பெறச்செல்லும் மாணவர்கள் தமது அடிப்படை அறிவை விருத்தி செய்வதற்காக நிறுவனத்தின் கொழும்பு அலுவலகத்தில் கணனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன - என்கிறார் அவர்.

யாழ். மண்ணைச் சேர்ந்த பலர் பல்வேறு துறைகளில் பிரகாசித்த போதும், பல்வேறு உயர் பதவிகளை வகித்த போதும் ஆங்கில அறிவு சார்ந்த பரீட்சைகளில் பின் வாங்குகின்றனர் என்று அவர் கவலை வெளியிட்டார்.

மாணவர்களுக்கான பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவன அனுமதிகளுக்கும் மற்றும் விஸா வசதிகளுக்கும் தமது நிறுவனம் உதவி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குடிவரவு, குடியகல்வுச் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து, தகைமைகளையும் ஆராய்ந்து புள்ளிகளின் அடிப்படையில் கனடா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளில் குடியேற வாய்புக்கள் உள்ளன. அதன் மூலம் நிரந்தர வதிவிடமாகவும் மாற்றிக் கொள்ளவும் முடியும். இதற்கான ஆலோசனைகளை எமது நிறுவனம் வழங்கிவருகின்றது என்றார் அவர். (3)

# உள்ளகத் தொலைபேசி வசதிகளை யாழ். ரெலிக்கொம் வழங்குகிறது

குடாநாட்டில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு உள்ளகத் தொலைபேசி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் ஒன்றை ரெலிகொம் நிறுவனம் நடைமுறைப்படுத்திவருகின்றது.

குறைந்த விலையில் சிறந்த சேவையைப் பெறக்கூடிய பந்திய தொழில்நுட்பத்துடன் கூடிய - உள்ளகத் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

அறிஸ்டல் (ARISTEL) ரக உள்ளகத் தொலைபேசித் தொகுதி கொண்ட கருவிகள் மூலம் விரும்பியபடி இணைப்புகளை பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.




ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் தொழில் நுட்பவியலாளர் குழு இந்த இணைப்பை வழஙகுவர்.

இணைப்பைப்பெற விரும்புபவர்கள் ரெலிக்கொம் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3)

# கனடாவில் தமிழ் மக்களின் வர்த்தகப் பெருவிழா

உலகின் மிகப்பெரிய தமிழ் வர்த்தக கைநூலான தமிழன் வழிகாட்டி ஸ்தாபனம் எதிர்வரும் இம் மாதம் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் கனடாவின் ரொரன்றோ நகரில் வர்த்தகக் கண்காட்சியினை நடத்தவுள்ளது. நோத் அமெரிக்கா தமிழ் மக்களின் மிகப்பெரிய வர்ததகக் கண்காட்சி என வர்ணிக்கப்படும் இந்த வர்த்தகப் பெருவிழாவில் கடந்த வருடம் இருபத்தையாயிரம் பேர் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கே இருநூறு வர்த்தக ஸ்தாபனங்கள் வர்த்தகச் சாவடிகளை அமைத்து பொருள்களை விற்பனை செய்வார்கள். அத்தோடு, மேடை நிகழ்சசிகள், உதைபந்தாட்டப் போட்டிகள், சிறுவர் முதியவர்களிற்கான நிகழ்ச்சிகள் என வர்த்தகப் பெருவிழா நடைபெறும். இவ்வாண்டும் வழமை போல நிகழ்ச்சி ஒழுங்குகள் நடைபெறுவதாக தமிழன் வழிகாட்டி அதிபர் செந்தி அறிவிததுள்ளார். (3)

# உரக்கூட்டுத்தாபனத்தின் யாழ்.முகவர் நியமனம்

இலங்கை உரக்கூட்டுத்தாபனம் தனது சேவையை யாழ். மாவட்டத்துக்கும் இன்று விஸதரிக்கின்றது. யாழ். மாவட்ட பிரதான விநியோகஸ்தராக கோப்பாய் மாதா கோயிலுக்கு அருகில் இயங்கும் வடக்கு - கிழக்குக் கிராமிய அபிவிருத்தி (தனியார்) நிறுவனத்தை உரக்கூட்டுத்தாபனம் நியமித்துள்ளது. இந்த நிறுவனத்தில் விவசாயிகள் குறைநத விலையில் உரத்தினைப் பெறலாம் என்று உரக்கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய சந்தைப்படுததும் முகாமையாளர் கே.எஸ்.நிரோஷ்ராஜ் தொிவித்தார். (3)

# பொறியியல் கற்கைநெறியில் கால்பதிக்கும் சிற்றி கைட்ஸ்

யாழ்ப்பாணம்,மே 2

பல்துறை சார்ந்த பொறியியல் கற்றைநெறியைப் போதிக்கும் சிற்றி அன் கைட்ஸ் என்ற நிறுவனம் யாழ்ப்பாணத்தில் கால்பதித்துள்ளது.

தொலைத்தொடர்பு, மின்சார மற்றும் இலத்திரனியல், கட்டுமானக் கைத்தொழில், மோட்டார் வாகனம், பொறிமுறை போன்றவற்றில் பொறியியல் பட்டம் பெறக்கூடிய கற்றைநெறிகளை இந்த நிறுவ்னம் அறிமுகம் செய்கின்றது.

ஜி.சீ.ஈ. (சாதாரண) மற்றும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைகளில் தோற்றிய மாணவர்களுக்கு வரப்பிரசாதமான கற்றை நெறிகள் போதிக்கப்படுகின்றன.

இத்துறை சார்ந்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் பரப்பும் நோக்குடன் இந்த நிறுவனம் இலவச கருத்தரங்கு ஒன்றை நேற்று [illegible] கல்லூரியில் நடத்தியது.



அந்த நிறுவனத்தின் பணிப்பாளரும் விரிவுரையாளருமான க.சந்திரபோஸ் இக்கருத்தரங்கில் விரிவுரையாற்றினார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கொள்வனவு செய்து 6 மாதங்களான Elba 12,000 Bty Split Type Air coolar (A.C.) விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: K.பாபு. 077 6135306. (44862)

யாழ்நகர் மையப் பகுதியில் உள்ள கட்டடத்தில் உடைக்கப்பட்ட கற்கள் (தூள்கள்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773039629. (44861)

Wheel Chair உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தங்கராசா. T.P.: 222 3289. (44884)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் விளையாட்டு மைதானத் திற்கு அண்மையில், காளி கோவில் வீதியில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 9059840, 021 222 2168. (44849)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

யாழ்.போன்செப்

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திரீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.


# திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (44881) (26-14-17)

தொடர்பு: ரமணன், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22,சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்களே...

பாஸ்போர்ட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

# மூர்த்தி ஸ்ரூடியோ அன்ட் டிஜிட்டல் கலர் லாப்

T.P: 0714168475

யாழ். வீதி, மானிப்பாய். T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com


## முன்பள்ளிக்கு விளையாட்டு முற்றம்

தென்மராட்சிக் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவையினர் மாவீரர் லெப்.கேணல் குணா நினைவாக கல்வயல் டெனிஜா முன் பள்ளிக்கு விளையாட்டு முற்றம் ஒன்றினை அமைத்துக்கொடுத்துள்ளனர். (த-117)


# KINGS ELECTRONICS



சன் T.V
பொதிகை
BBC World
DD Sports
(35 Channels)

12750/=

EUROSTAR DISK, EUROLINE LNBF, EUROLINE RECEIVER ( Made In Korea )

மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

எமது நிறுவனத்திற்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.

இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# சேவைநலம் பாராட்டும் வாழ்த்தும்



எமது கல்லூரியில் 10 வருடகாலமாக விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய

## திருமதி திலகவதி நாகேந்திரன்

அவர்கள் இன்று (02-05-2005) திங்கட்கிழமை தனது 55ஆவது வயதில் ஓய்வுபெறுவதையிட்டு, அவர்களது சேவையைப் பாராட்டி மனமார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். (44815)(26-14-17)

## தமிழ்நாட்டில் ஐஸ்கட்டி மழை

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த வியாழக்கிழமை சூறாவளிக் காற்றுடன் ஐஸ்கட்டி மழை கொட்டியது.

மாலை 6 மணியளவில் திடீரென சூறாவளிக் காற்று வீசியது. தொடர்ந்து இடிமின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழையின் காரணமாக வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

பலத்த மழையின் போது ஐஸ் கட்டிகள் ஆகாயத்திலிருந்து சிதறி விழுந்தன. சிறுசிறு துண்டுகளாக விழுந்த ஐஸ் கட்டிகளைப் பொது மக்கள் அதிசயமாக எடுத்துப் பார்த்தனர். சிறிது நேரத்தில் அவை கரைந்து போயின.

இந்த மழை சுமார் 45 நிமிடநேரம் பெய்தது. அரக்கோணத்திலும் இவ்வாறு ஐஸ்கட்டி மழை அரை மணி நேரம் பெய்தது. (த-204)

## சிப்பாய்க்கு விளக்கமறியல் நீடிப்பு

கைதடி, நுணாவில் முகாமில் இராணுவ மேஜர் உட்பட மூன்று பேரைக் கொலை செய்த இராணுவச் சிப்பாயை மே 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்சிறைச்சாலையில் விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த கேஜீஎஸ்விஜயகுமார என்னும் சிப்பாய் பலத்த பாதுகாப்புடன் சாவகச்சேரி நீதி மன்றுக்குக் கொண்டுவரப்பட்டார். (3-117)

# சேவைநலன் பாராட்டி மனமுவந்து வாழ்த்துகின்றோம்



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராக இருந்து 01.05.2005 இல் ஓய்வுபெற்றவரான எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய

## திருமதி சர்வேஸ்வரி ஸ்ரீகாந்தன்

(Dip. in Agri.)

அவர்கள் தமது 31 வருட ஆசிரியப் பணியில் எமது கல்லூரியில் 15 வருடங்கள் ஆசிரியராகவும், 8 வருடங்கள் பிரதி அதிபராகவும் பணியாற்றியவர். சேவை மனப்பாங்கு, அர்ப்பணிப்பு உணர்வு, நேர்மை ஆகிய உயரிய பண்புகளைக் கொண்ட இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைந்து பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம்.

(44859) (52-16-18)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

02-05-2005

பகலவன் - சுபாஷினி தம்பதியினரின் செல்வப் புதல்வன்

## பிரஷிகன் (ரிஷி)




தனது முதலாவது பிறந்த தினத்தை பிரான்ஸில் இன்று திங்கட்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியதாத்தா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரா, மச்சாள்மார், மச்சான்மார், அண்ணா, அக்காமார் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் அம்மன் அருளினால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

இல. 04 இராமன் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: சுதர்ஷினி (அன்ரா).

(44826)(25-14-16)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| வையத்துள் | வானுலகுள் |
|---|---|
| 02 - 07 - 1938 | 25 - 04 - 2003 |

## அமரர் செல்லையா சபாபதி

(நீர்ப்பாசனப் பிரிவு உதவியாளர், கைதடி - நாவற்குழி)

திதி : 03.05.2005

மனிதரில் மாணிக்கமாய்
தொழிலிலே விற்பனனாய்
குடும்பத்தின் குல விளக்காய்
வாழ்ந்தவரே! ஈராண்டு என்ன
நூற்றாண்டு வாழும் உங்கள் நினைவு!

'சபாபதி பவனம்'
இல.179B, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.

- குடும்பத்தினர்.

(34471)(38-14-17)


# கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான துரித 3 மாதகாலப் பயிற்சிகள்

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- கூந்தல் அலங்காரம்
- கைப்பணிகள்
- FABRIC வர்ணந்தீட்டல்

இத்துடன், அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமானமுறையில் சேலை அணியும்முறையும்2 நாள்கள் நடைபெறும்.

❒ 6 மாதகாலத் தையல் பயிற்சி மற்றும் பூவேலை வகுப்புகளும் நடைபெறுகின்றன.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

புதிய கிழமைநாள் மற்றும் சனி, ஞாயிறு பிரிவுகளுக்கு மாணவிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.


- இயக்குநர்.

(A/42601)(42-14-17-26)




# எழுத்து இராமேஸ்வரம் புங்குடுதீவு

# பாணாவிடை சிவன்கோயில் (தான்தோன்றீஸ்வரம்)



39 அடி உயரமுடைய பல லட்ச ரூபா செலவில் வடிவமைக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

இன்று (02-05-2005) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். தேர்த்திருவிழா பகல் 11.00 மணிக்கு எம்பெருமான் புதிய தேரில் ஆரோகணித்து எழுந்தருளுவார்.

அடியார்கள் அனைவரும் வருகைதந்து பெருமானின் தேர்த்திருவிழாவிலும் பங்குகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புங்குடுதீவு. - தேர்த் திருப்பணிச்சபை.

(44877)(26-14-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கி எழுந்த மேதின உணர்வு



மருத்துவபீட மைதானத்தை நிறைத்த சனசமுத்திரம்...




உற்சாகமூட்டிய பெண்கள் அணி...



பேரணியில் தலைவர் பிரபாவின் முழுவுருவ கட்அவுட்...




மண்ணின் மைந்தர்கள்...



உரமேறிய உழைப்பாளர்களின் ஊர்தி...

படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர் எஸ்.பிரபா



பொதுச்சுடரேற்றிய தாய்...



துள்ளி எழுந்துவந்த பள்ளிச் சிறுமிகள்...



பேரணியை நிறைத்த சிவராமின் படங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Job Opportunities in Jaffna

**NIIT** the global IT Education & Training Company is looking for dynamic individuals for the following posts in Jaffna.

## Center-Head

The incumbent will take total responsibility for the Center and ensure that a high quality service is provided to our customer in keeping with the standards set by the organization. The person should be an achiever and oriented towards achieving business targets.Should posses multidisciplinary skills especially in the areas of Marketing, Management and IT. A Degree in any of the above disciplines would be advantageous.

An attractive salary package is on offer for the right candidate with performance incantives. Basic starting salary would be not less than Rs. 20,000 /=

## Student Counsellor

Should be a young lady with a pleasing personality and a flair for interacting with people.

sho will previde adviee and the ability to be aggressive in achieving atudent registration targets is a must.

Good working knowledge of MS office 2000 is essential.

An attractive salary package is on offer for the right candidate with performance incentives.

Basic starting salary would be not less than Rs 10,000/=.

*Excellent communication skill and a good command of English and the ability to work in a computerized environment are essential for all positions.*



**IQ test will be held on Sunday the 8th May 2005. Those who wish to sit for the Test, Register yourself with Public Relations Manager at Uthayan, 361, Kasthuriyar Road, Jaffna.**

முதல் 500 மாணவருக்கும்

# GLOBAL VILLAGE
## COMPUTER EDUCATION
(A Unit of Sovereign Infotech India Pvt. Ltd)

50% OFF

புதிய பிரிவுகள் ஆரம்பம் 06-06-2005 ஞாயிறு காலை 10:00 மணி

Quality EDUCATION with INTERNATIONAL recognised Certification

OUR AFFILIATION: IMIS UK, IDM UK, Tally, Lynda online learning library, VTC Virtual Training Company

INTERNET & E-MAIL 1 Week 1000/-

FREE Study Materials

**OFFICE AUTOMATION**
- Introduction to Computers
- Microsoft Word
- Microsoft Excel
- Microsoft Access
- Microsoft Powerpoint
- Internet technology

Duration 3 Months

**Diploma IN COMPUTER APPLICATION**
- Introduction to Computers
- Microsoft Windows
- Microsoft Office Applications
- Internet technology
- C++ / Visual BASIC 6

Duration 6 Months

**WEB DESIGNING**
- Introduction to Computers
- Introduction to Internet
- HTML / DHTML
- Macromedia Dream weaver MX
- Macromedia Flash MX 2004

Duration 3 Months

**DESKTOP PUBLISHING**
- Introduction to Computers
- Coral Draw 12
- Adobe Photoshop CS
- Adobe Pagemaker 7
- Text / Image Scanning

Duration 3 Months

**HARDWARE ENGINEERING**
- Introduction to Computers
- Operating Systems
- Assembling & Troubleshooting
- Software Installation
- Networking

Duration 3 Months

**GLOBAL KIDS**

Stage I
- Identifying Computer Devices
- Features of Computer
- Functions of a Copmuter
- Fun with Computer
- Drawing with Computer
- Intelligent Games

Stage II
- Inside a Computer
- Memory Storage
- Storage Media
- Word Processing
- Animations
- Internet Operations

1 Year

**TALLY**
- Groups
- Ledgers
- Vouchers
- Inventory
- Reports

Computerized Accounting

Power of Simplicity

**HONORS DIPLOMA IN COMPUTER APPLICATION**
- Introduction to Computers
- Microsoft Office Applpicatio
- Internet Operations
- HTML / DHTML & JavaScript
- RDBMS
- Java

Duration 9 Months

**MULTIMEDIA COURSES** (1 Year)

Level I 2D Graphic & Animations
- Introduction to Computers
- Corel DRAW 12
- Adobe Photoshop CS

Level II 3D Modelling & Animations
- 3D Studio MAX
- May

Level III Audio & Video Editing
- Adobe Premiere Pro
- Sound Forge

Level IV Digital Imaging
- Advance Adobe Photoshop CS
- Plug-ins

Level V Web Designing
- HTML & DHTML
- Macromedia Dreamweaver MX 2004
- Macromedia Flash Action Script
- Macromedia Director 8

**PROGRAMMING LANGUAGES**

Visual BASIC 6, Visual BASIC.NET JAVA C++, ASP.NET & C#

**E-TOUCH COMPUTER SYSTEM,**
Uduvil Road, Maruthanarmadam, Jaffna

விபரங்களுக்கும் விசாரணைகளுக்கும்: Jaffna District Franchise : T.P No: 0214590222 Www.globalvillage-lanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியங்குளத்தில் இருந்து பளை வரை நீண்டதூர சைக்கிள் ஓட்டப் போட்டி

## வவுனியா வாசிகள் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர்

யாழ்ப்பாணம்,மே 2

ஆனையிறவு வெற்றி நாளின் 5 ஆம் ஆண்டு நிறைவையும் தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரின் வெற்றி நாளையும் முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் 90 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று நடத்தப்பட்டது.

கடந்த 28 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு புளியங்குளம் சோதனைச் சாவடி முன்பாக ஆரம்பமான இச்சைக்கிள் ஓட்டப் போட்டி பளை காவல்துறை செயலகத்திற்கு முன்பாக நிறைவடைந்தது.

இந்த நிகழ்வை வடபோர் முனைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் ஜெரி ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வழங்கும் நிகழ்வு அன்றையதினம் முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் ஜே.அஜந்தகுமார முதலிடத்தையும் வையாபுரி திருச்செல்வம் இரண்டாமிடத்தையும் தர்மராசா புஸ்பரத்தினம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். மூவரும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கான பரிசில்களைத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், கேணல் ஜெயம் ஆகியோர் வழங்கினர்.

இந்தச் சைக்கிள் ஓட்டப்போட்டியில் பல மாவட்டங்களிலிருந்தும் 50 இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்துகொண்டனர். (3-203)



யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை பெண்கள் அணிகளுக்கு இடையே இடம்பெற்ற கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டியின்போது கொக்குவில் இந்துக் கல்லூரியும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளும் மோதிக்கொள்ளும் காட்சியைப் படத்தில் காணலாம். *(படம்: நேசன்)*

## மாவட்ட ரீதியாக சைக்கிள் ஓட்டப்போட்டி

கைதடி,மே 2

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றினை எதிர்வரும் ஐந்தாம் திகதி யாழ். மாவட்ட ரீதியில் நடத்த இருக்கின்றது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் வீரர்கள் தமது விண்ணப்பங்களை விளையாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்குமாறு வளர்மதி விளையாட்டுக் கழகத் தலைவர் க.மோகனதாஸ் கேட்டுள்ளார். (3-75)

## பல்கலைக்கழகங்களுக்கிடையில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கைதடி,மே 2

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை மொறட்டுவப் பல்கலைக்கழக மைதானத்தில் (புற்தரை) நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி, கொழும்பு பல்கலைக்கழக அணி, மொறட்டுவப் பல்கலைக்கழக அணி ஆகியன மோதவுள்ளன.

இப்போட்டியில் கலந்துகொள்வதற்காகப் புதன்கிழமை காலை யாழ். பல்கலைக்கழக அணி கொழும்பு புறப்படவுள்ளது.

கடந்த வருடம் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் இடையில் நடைபெற்ற மினி ஒலிம்பிக் போட்டிகளின் கிரிக்கெட் போட்டியில் முதலாவது, இரண்டாவது இடங்களைப் பெற்ற பல்கலைக்கழகங்களே இப்போட்டிக்கு அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (3-190)

## விளையாட்டு

### ஒட்டுசுட்டான் கோட்டப் போட்டிகள்

ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகளுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் யாவும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலேயே நடைபெறும் என்று ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.(3-341-203)

### தென்மராட்சி கழகங்களுக்கிடையில் தடகளப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 2

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் கொடிகாமம் அ.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளது. (த-190)

### கால்இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே 2

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.உதைபந்தாட்ட லீக் என்பவற்றின் ஆதரவுடன் புத்தூர் எவரெஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டம் இன்று மாலை 4 மணியளவில் புத்தூர் எவரெஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி - கொற்றவற்றை சிவானந்தா வி.க. எதிர் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வி.க.

★ மாலை 5 மணி - நாவாந்துறை சென். மேரிஸ் வி.க. எதிர் அல்வாய் மனோகரா வி.க. (த-190)

## மீன்பிடி உபகரணங்கள் அன்பளிப்பு

ஒட்டுசுட்டான்,மே 2

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேச மீனவர்கள் மீண்டும் தொழிலை ஆரம்பிக்கும் பொருட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்களை வழங்கியது.

இந்த உபகரணங்களால் பாதிக்கப்பட்ட தமது வாழ்வியலை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இப்பகுதி மீனவருக்குப் பல்வேறு அமைப்புகளும் மீன்பிடி உபகரணங்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-341-204)

## முல்லை கல்வி வலய தொண்டர் ஆசிரியருக்கு நேர்முகத்தேர்வு

புதுக்குடியிருப்பு,மே 2

அரச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோரை ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்களை விசேட நிபந்தனையின் கீழ் ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தவற்காகவே இந்த நேர்முகத் தேர்வு இடம்பெறுகின்றது.

எனவே, நேர்முகத் தேர்வுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்கள் உரிய ஆவணங்களின் மூலப் பிரதிகளுடனும் அவற்றின் உறுதிசெய்யப்பட்ட நிழற்பிரதிகளுடனும் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்க வேண்டுமென்று முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-353-203)

## வீதி திருத்தப்படுகிறது

வட்டக்கச்சி,மே 2

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டமாக டோசர் மூலம் வீதிகளைத் துப்புரவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (த-405-203)

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மகளிர் அமைப்புகள் சங்கமம்

புதுக்குடியிருப்பு,மே 2

புதுக்குடியிருப்புப் பிரதேச மாதர் சங்கங்கள் ஒன்றிணைந்து சங்கம நிகழ்வினை அண்மையில் புதுக்குடியிருப்புத் தேசிய எழுச்சிப் பேரவை செயலகத்தில் நடத்தியது.

புதுக்குடியிருப்பு மாதர் சங்கத் தலைவி வானதி மதியாபரணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினைப் புதுக்குடியிருப்புப் பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி மற்றும் இரணைப்பாலை உதவிப் பங்குத்தந்தை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த அ.ஈழவன் ஏற்றினார்.

குடும்ப வன்முறையை ஒழித்தல், குறைத்தல் என்னும் பொருளில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் சி.தயானந்தா, பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் மதனி ஆகியோர் நிகழ்த்தினர். (த-353-204)



கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயலகத்தைப படத்தில் காணலாம். கடந்த 19 ஆம் திகதி இந்தக் கட்டடம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. *(படம்: பரந்தன் செய்தியாளர்)*

## நாடகப் பயிற்சிப் பட்டறை

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச ஆசிரியர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சிப் பட்டறை ஒன்று கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் இடம்பெற்றது.

ஜீ.ரி.சற் நிறுவனத்தின் அடிப்படைக் கல்வி திட்டத்தின் வன்னி கல்விப் புனர்நிர்மாண நிகழ்ச்சித் திட்ட அனுசரணையுடனும் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரின் ஆதரவுடனும் இந்தப் [illegible]

கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 23 ஆம் திகதி ஜீ.ரி.சற் இன் திட்டத் தொழில்நுட்ப ஆலோசகர் க.கந்தசாமி தலைமையில் இந்தப் பயிற்சிப் பட்டறையின் இறுதிநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன. அவர்களது நாடக ஆற்றுகையும் மேடையேற்றப்பட்டது.(த-405-203)

## 'கியூடெக்' நிறுவனம் சுழற்சிமுறைக் கடன்

ஒட்டுசுட்டான்,மே 2

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேச மக்களின் பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் 'கியூடெக்' நிறுவனம் நான்கு மில்லியன் ரூபாவினை முல்லைத்தீவு வர்த்தக சங்கத்திடம் வழங்கியுள்ளது.

சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட மேற்படி நிதி வர்த்தக சங்கத்தினரால் தொழில் செய்யும் தன்மைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

ஒரு தொகுதி நிதி ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களிற்கு நிதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 'கியூடெக்' நிறுவனத்தினர் தெரிவித்தனர். (த-341-204)

## வன்னிச் செய்திகள்

## கல்விப் பணிப்பாளருக்கு பாராட்டு விழா

வட்டக்கச்சி,மே 2

கிளிநொச்சி கல்வி வலய முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளரும் தற்போதைய முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளருமான பசுபதி அரியரட்ணத்துக்கு கடந்த 26ஆம் திகதி பாராட்டுவிழா நடைபெற்றது.

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக ஊழியர்களும் கிளிநொச்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களும் இணைந்து இவ்விழாவினை ஏற்பாடு செய்திருந்தனர்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம், கிளிநொச்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ம.க.பத்மநாதன் உட்படப் பல முக்கியஸ்தர்கள் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் வலயக்கல்வி அலுவலக ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது அமைப்புகளைச் சேர்ந்தோர் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர். (த-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GAMA ABACUS

# காமா அபாக்கஸ்

யாழ். மாவட்டம் முழுவதும்

முகவர் தேவை

தொடர்புகளுக்கு:

KMC, 850, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.: 0776412366 / T.P.: 077585920

எமது கிளைகள்:

1. 79, K.K.S. வீதி கொக்குவில் சந்தி.
2. YMCA, நவாலி.
3. நிலவு. Com - மானிப்பாய், கந்தர்மடம்.
4. 850, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.

(44868) (24-18-16)

CHINMAYA

**DHARMA SEVAK COURSE**

(A Six Week Residential Course In English)

*@ Chinmaya Gardens - Coimbatore*

**From 15th June to 23rd July 2005**

**THE SALIENT FEATURES**

- ✔ Experience the joy of Gurukula living,
- ✔ Learn the fundamentals of Vedanta / Jnana Yoga (Prakarana Grantha, Upanishads, Geeta), Bhakti Yoga (Portions of Ramayana and Bhagavatam) and Karma Yoga,
- ✔ Learn the basics of Sanskrit followed by a 10 day spoken Sanskrit course,
- ✔ Learn how to conduct and get firmly grounded in spiritual practices (Sadhana) like Meditation, Japa, Puja, Homa etc.,
- ✔ Celebrate auspicious occasions like Guru Purnima etc.,
- ✔ Bond with Global Chinmaya Mission through the various a... and learn how to be a sevak / sevika of balvihar / study classes etc...

**Accommdation:**

Comfortable twin sharing rooms with attached bathrooms

**Food:**

Satvik vegetarian food will be served

**Course Donation:** (including boarding and lodging)

- ✔ Ind. Rs. 4,500/- per person
- ✔ Ind. Rs. 3,800/- per person (below 40 years)
- ✔ Ind. Rs. 2,500/- per person (below 25 years)

For registration and further enquiries , contact:
Course coordinator
**Br. Ajit Chaitanya**
Chinmaya Gardens, Nallur Vayal Post,
Siruvani Road, Coimbatore - 641114,
**Tamil Nadu, South India.**
Phone: (0422) 2615637 Fax: (0422) 2615725
e-mail: cgardens@satyam.net.in

## திருடிய பொருள்களை வீசி எறிந்துவிட்டு தப்பி ஓடிய திருடர்கள்

தென்மராட்சி.மே 2

புலோலி, கம்பாவத்தைப் பகுதியில் திருடர்கள் வீட்டு ஜன்னல் கம்பிகளை உடைத்து பொருள்களை அபகரித்துச் சென்றவேளை, அயலவர்கள் துரத்தியதில் பொருள்களை எறிந்து விட்டு திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

அப்பகுதியிலுள்ள வீடு ஒன்றில் யன்னலை உடைத்து உள்நுழைந்த திருடர் அங்கிருந்து நகைகள், பணம், உடுப்புகள் வைக்கப்பட்டிருந்த மூன்று சூட்கேஸ்களை எடுத்துக்கொண்டு வெளியேறும்போது வீட்டுக்காரர் அபயக்குரல் எழுப்பியுள்ளார்.

இதனையடுத்து அயலவர்கள் ஓடிவரவே 100 மீற்றர் தூரத்தில் சூட்கேஸுகளை எறிந்து விட்டுத் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(3-117)

## 10 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி.மே 2

மட்டுவில் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற மேலும் இருவருக்கு சாவகச்சேரி நீதிவான் தலா 10 ஆயிரம் வீதம் அபராதம் விதித்தார்.

சாவகச்சேரி பொலீஸாரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இருவருக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த 27ஆம் திகதி சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட 12 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-117)

## சாவகச்சேரியில் மரம் நடுகை

தென்மராட்சி.மே 2

சூழல் பாதுகாப்பு அதிகார சபையினர் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் மரக்கன்றுகளை நட்டுள்ளனர்.

அதிகார உத்தியோகத்தர்களும் நகரசபைச் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் இந்த மரக்கன்றுகளை நகரின் முக்கிய பகுதிகளில் நட்டனர்.

சாவகச்சேரி நகர்ப்பகுதி, விளையாட்டு மைதானம், இந்து மயானம், ஆலயங்கள், பஸ் நிலையம், சந்தை ஆகிய இடங்கள் இந்த மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. (3-117)

## தாதியர் பதவி உயர்வு நேர்முகப் பரீட்சை திருமலையில் நடந்தது

சாவகச்சேரி.மே2

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின்கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பணி புரியும் தாதியர்களை தரம் I இற்கு தரம் உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை கடந்தவாரம் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

இந்த நேர்முகப் பரீட்சையில் நூற்றுக்கு மேற்பட்ட தாதியர் கலந்துகொண்டனர்.

நேர்முகப் பரீட்சையில் சித்தியடையும் தாதியர் ஒரு வருட கால நிர்வாகப் பயிற்சியைப் பெறுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (3-31)

## யாழ். மாணவிக்கு 2 ஆவது இடம்

நவாலி,மே 2

சர்வதேச லயன்ஸ் கழகத்தினரால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போதைவஸ்து ஒழிப்பு சம்பந்தமான போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ரிஷிக்கா யோகநாதன் என்ற மாணவி 2ஆம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை ஈட்டிக் கொடுத்துள்ளார்.

இவருக்குக் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் வைத்து லயன்ஸ் கழகத் தலைவரினால் விருதும் பணமும் பல பரிசில்களும் அண்மையில் வழங்கப்பட்டன.

(த-100)

**Physics Group Class**

**A/L 2007**

செவ்வாய் } 4 p.m. -
சனி } 6 p.m.

இடம்: 2/1, மருதடி லேன்.
(பொஸ்கோ அருகில்).
(... 10 மணித்தியால வகுப்பு)

## ஆறாத்துயரில் எட்டு ஆண்டுகள்



அமரர்

**சபாரத்தினம் கனகசபாபதி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13-10-1946 | 01-05-1997 |

**திதி: 02-05-2005**

எம் அன்பின் திருவுருவாய் எம்மை வாழ வைத்த தெய்வமே! எட்டு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சைவிட்டகலாது.

இணுவில் தெற்கு,
இணுவில். (44851) (24-18-16) **- அன்பு மனைவி.**

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 ✱ 10 ✱ 1913 | 24 ✱ 04 ✱ 2003 |



அமரர் **கந்தையா இராசையா**

**திதி: 02-05-2005**

அன்புடன் அரவணைக்கும் கணவனாகவும்
பாசமிகு தந்தையாகவும்
என்றும் அன்புள்ளம் கொண்ட மாமாவாகவும்
எமதருமை அப்பாவாகவும்
திகழ்ந்த எம் அன்புக் குலதெய்வத்தின்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

"புவனகிரி"
ஊரெழு கிழக்கு,
ஊரெழு. (44872) (24-18-16)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கூறுவிலை கோரல்

உயரப்புலம், ஆனைக்கோட்டையில் அமைந்திருக்கும் புனித அடைக்கலநாயகி ஆலயத்தைப் புதிதாக நிர்மாணிக்க இருப்பதால் அந்த ஆலயத்தில் இருக்கும் கட்டடப் பொருள்கள், மின்சார உபகரணங்கள் (விவரம் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது) யாவும் விற்பனை செய்ய இருப்பதால், அப்பொருள்களுக்கான கூறுவிலையை 10.05.2005 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்பதாக கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். அன்றையதினம் முற்பகல் 11.30 மணிக்கு தங்கள் முன்னிலையில் கூறுவிலை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். கூறுவிலைகள் எங்கள் குறைந்தபட்ச மதிப்பீட்டில் இருந்து குறைவாக இருப்பின் அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம். ஆலயத்தையும் குறிப்பிட்ட பொருள்களையும் தினமும் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை பார்வையிடலாம். மேலும் விவரங்கள் அறியவிரும்பின் பங்குத்தந்தை **வண. பிதா நேசராஜா** (தொ.இல. 222 2755) அல்லது **திரு. யோ. யோன்சிங்கம்** (தொ.இல. 222 2426, 222 3404) என்பவர்களுடன் தொடர்புகொண்டு விவரங்களை அறிந்துகொள்ளவும்.

**பொருள்கள் விவரம்:**

ஓடுகள், (பனை) மரங்கள், சிலாகைகள், தூண்கள், தீராந்திகள் (சயிற் கோயில் தீராந்தி தவிர்ந்த), கதவுகள், யன்னல்கள், இரும்பு Truss, சுவர் கற்கள் (அதன் கழிவுகள் உட்பட) மின்சார உபகரணங்கள் அனைத்தும்.

கேள்வி கோரல் கடித உறையில் இடதுபக்க மூலையில் "**அடைக்கலநாயகி ஆலயக் கட்டடப் பொருள்களுக்கான கேள்வி கோரல்**" எனக் குறிப்பிடல் வேண்டும்.

*அடைக்கலநாயகி ஆலயம்,*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

**தலைவர்,**
**ஆலயப் பங்குச்சபை.**

(44855) (24-18-16)

## முதலாம் வருட நினைவஞ்சலி



எம் இதயக் கோயிலை விட்டு
அகலாத
எமது அருமைமகன்

**சிவநேசன் பாபுசங்கர்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24-12-1976 | 02-05-2004 |

அன்புக்கோர் இலக்கணமாய் பண்புக்கோர் பதுமையாய்
இல்லற வாழ்க்கை தேடுவோம் என்று எண்ணியிருந்த வேளையில்
எம்மையெல்லாம் துன்பக் கடலில் ஆழ்ந்து தவிக்கவிட்டுவிட்டு
நீ எங்குதான் சென்றனையோ பாபு? தூயவனே! ஆருயிரே!
துடிதுடிக்க வைத்தாயோ? இனி யாம் உன்னை எப்போது
காண்போம்? ஒருமுறை உன் திருமுகத்தைக் காட்டிட
ஓடோடி வரமாட்டாயா? எமது அருமைமகன் பாபுவே!
உமது ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும்:*
**அப்பா, அம்மா, அக்கா,**
**தம்பி, மாமி, அம்மம்மா.**

*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(44807) (24-18-16)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, ஸ்ரேசன் வீதியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் 30.04.2005 சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டொறத்தியின் அன்புக் கணவரும் அன்டோனியோவின் அன்புத் தந்தையும் அலோமாவின் மாமனாரும் யொகான், ஐசக், மார்க் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.05.2005) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் புகையிரத வீதி, சாவகச்சேரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

330, Serpertine flats,
Colombo - 08. (44860) (24-18-16)

தகவல்:
**அன்டோனியோ** (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 14 - 03 - 1928

மறைவு 13 - 04 - 2004

## அமரர் கதிரன் வயிரமுத்து

திதி: நவமி

ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் திருவுருவம்
மாறாமல் எம் நெஞ்சில் நிலைத்தே இருக்கின்றது.
தீராத வேதனையால் தினமும் நாம் தவிக்கின்றோம்.
*ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.*

இன்று (02-05-2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற முதல் வருட நினைவுப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. முகவரி: சசி மில், சண்டிலிப்பாய்.
நிரந்தர முகவரி: எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்.
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(44893)(11-12-53)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெகநாதன் கேதீஸ்வரி

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, மதவடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகநாதன் கேதீஸ்வரி அவர்கள் நேற்று (01-05-2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை முத்தையா மற்றும் சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகளும் ந.ஜெகநாதன் (உரிமையாளர், வெல்டிங் வேக்ஸ், உரும்பிராய்) அவர்களின் அன்பு மனைவியும் சஞ்சீவன், டிலானி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ப.கோமதி, மு.ஸ்ரீதரன் (சுவிஸ்), திருமதி கோ.சுபாசினி (கிரி - உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், திருநெல்வேலி) ஆகியோரது அருமைச் சகோதரியும் ந.சண்முகநாதன் (துஷ்யந்தாஸ் வெல்டிங் வேக்ஸ், கோண்டாவில்), திருமதி நா.பாலசுப்பிரமணியம், திருமதி ப.சேய்மானந்தன் (கிராம உத்தியோகத்தர், J/111 திருநெல்வேலி), திருமதி சி.பாலேந்திரன், ந.சிவலோகநாதன், ந.பூலோகநாதன் (சுவிஸ்), தி.பவளகுமார், திருமதி ஸ்ரீகிரிஜா, சோ.கோகுலன் (ஆசிரியர், யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை) ஆகியோரது மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**ந.ஜெகநாதன்** (கணவர்)
உரிமையாளர், வெல்டிங் வேக்ஸ், உரும்பிராய்.

மதவடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (44895)(26-11-12-53)

## திருமதி கந்தவனம் கணேஸ்வரி



அரியாலையைச் சேர்ந்த திருமதி கந்தவனம்கணேஸ்வரி அவர்கள் நேற்று (01.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - அன்னப்பிள்ளையின் அருமை மகளும் காலஞ்சென்ற கிராமசேவை உத்தியோகத்தர் கிருஷ்ணசாமி என அன்பாக அழைக்கப்படும் கந்தவனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மாவின் மருமகளும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, தியாகராசா, திலகவதி ஆகியோரின் மைத் துனியும் ஜெகதீஸ்வரனின் சிறிய தாயாரும் பத்மாதேவியின் மாமியாரும் கிருஷ்ணதாஸ் (ஜெகன்), லிஷா, ஹேஸ்திரா, ஹரிகரதாஸ், ஜெகதீபா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இல.7, திருமகள் வீதி, அரியாலையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஜெ.ஜெகதீஸ்வரன்** (பெறாமகன்).

7, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (44896)(11-12-53)

# முதலாம் வருட இதய அஞ்சலி



பிறப்பு 11 - 12 - 1987

இறப்பு 02 - 05 - 2004

## பாலச்சந்திரன் மகிஷன்

(வணிகப்பிரிவு -2006 மாணவன், யாழ்.மத்திய கல்லூரி)

பாசத்தை எம்முடன் பகிர்ந்து எம்மைப் பரிதவிக்கவிட்டு
நீ சென்று பன்னிரண்டு திங்கள் கடந்ததே மகீஷா!
நீ மறைந்தும் மறையாத உன் நினைவுகள்
எங்கள் விழியின்
ஓரத்தில் வழியும் ஈரத்தில் கருக்கொண்டனவே மகீஷா!
ஓம் சாந்தி!

பிள்ளையார் கோயிலடி, தாவடி கிழக்கு, கொக்குவில்.
**- குடும்பத்தினர்.**
(C-42614)(11-12-53)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வநாயகி மாரிமுத்து

(செல்லம்)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகி மாரிமுத்து (செல்லம்) அவர்கள் 01.05.2005 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பன்னாலையில் காலை 10மணிக்கு நடைபெறும். விவரம் நாளைய உதயனில் வெளியாகும்.

தகவல்: **குடும்பத்தினர்,**
பன்னாலை, தெல்லிப்பழை.
077 9068215

அனுஜா ஸ்ரோர்ஸ்,
103, மலே வீதி, கொழும்பு -02.
T.P.: 2439953.
(44899)(11-12-53)


**ராஜா யாழ்ப்பாணம்**

பரத், கோபிகா மற்றும் பலர் நடித்த (ரீலக்ஸ்)

4 ஸ்டூடன்ட்ஸ்

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 9.30 (பு.நே.)

(C/41381)(29-16-17)

**நாதன்ஸ் சினிமா**

இன்று முதல்

ஜெமி ஆகாஷ், மீஷா, ராஜ்கிரண், செந்தில், ராதாரவி நடித்த



செவ்வேல்

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

(C/41377)(29-16-17)

**மனோகரா யாழ்ப்பாணம்**

விஜய், ஹரிணி, வடிவேல் நடித்த

சச்சின்



காட்சி நேரம்:
10.30 a.m., 2.30.p.m., 6.30p.m., 9.30 p.m.

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

மூன்றாவது ஜனத்திரள் வாரம்
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த

காட்சிகள்:
11.00, 3.00, 7.00
10.00. (பு.நே.)





# மரண அறிவித்தல்கள்

## கந்தையா வைத்திலிங்கம்



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வைத்திலிங்கம் 30.04.2005 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை நடைபெறும். விவரம் நாளைய உதயனில் வெளியாகும்.

*சின்னச்சுதா வீதி, நாச்சிமார் கோயிலடி, அராலி தெற்கு.*

தகவல்:
**வை.தவராசா** (மகன்).
(44897)(11-12-53)

## இளையதம்பி சுப்பிரமணியம்



(வேலணை கிழக்கு)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், அத்தியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சுப்பிரமணியம் அவர்கள் 2005-05-01 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும் கந்தஞானி (உரிமையாளர், நியூபிரியங்கா நகைமாளிகை, யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் விக்கினேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், பரமேஸ்வரன் (உரிமையாளர், நியூ அர்ச்சனா, நகைமாளிகை, கொழும்பு) ஞானகுணேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சன், சர்மினி, தனுஷன், பிரதுஷா, சௌமிகாந், அர்ச்சனா, தினேஸ்காந், மதனகாந் ஆகியோரின் அருமைப் பேரனும் பாக்கியலட்சுமி, நாகரத்தினம் காலஞ்சென்ற பூபதி மற்றும் இராசம்மா காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் மார்க்கண்டு ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அத்தியடி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று (2005-05-02) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*சு.கந்தஞானி, (உரிமையாளர், நியூபிரியங்கா நகை மாளிகை, யாழ்ப்பாணம்). 117/4 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
(44894)(46-11-12)

## திருமதி பார்வதிப்பிள்ளை காசிநாதன்

*(மலேயன் பென்ஷனியர், சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா உபயகாரர்)*

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதிப்பிள்ளை காசிநாதன் அவர்கள் 29.04.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரவேலு காசிநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவஞானத்தின் சகோதரியும் தையல்நாயகி கதிரைமலை (சிங்கம்), ஆனந்தகிருஷ்ணன், காலஞ்சென்ற ஹரிக்கிருஷ்ணன் மற்றும் சத்தியபாமா, சரஸானந்தராஜா, கமலாதேவி, காந்திமதி காசிநாதன், ஜெகநாதன் (ஓய்வுபெற்ற உபதபாலதிபர் - சங்குவேலி), காலஞ்சென்றவர்களான ஜோதிநாதன் (சாமுவேல் & சன்ஸ்), தேவராஜன் (நில அளவையாளர்) மற்றும் ஞானசாகரன் (கொழும்பு), திலகதேவி (ஆசிரியை, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்), சப்தசமுத்திரன் (பிரான்ஸ்), உமாதேவி - கெங்காதரன் (சிங்கப்பூர்), கேதீஸ்வரி (நல்லூர் பிரதேச சபை), வர்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயலட்சுமி (சிங்கப்பூர் Air Line), தனலட்சுமி ராகுலன் (சிங்கப்பூர்), பரமநாதன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), கேதீஸ்வரி சிவலிங்கம் (சிங்கப்பூர், Air Line), நில்டினி, சிவராஜா (டென்மார்க்), சத்தியராஜா (பிரான்ஸ்), பிரியதர்சினி (உயர் தொழில்நுட்ப நிறுவனம்), வேணுகா, திவாகர் (குடிசார் எந்திரவியல்), குளோரிலா (AAT), வதனி ராஜேந்திரன் (ஆசிரியை, சென்.கிளஸ், வெள்ளவத்தை), கிளென்னி (லண்டன்), ஸ்ரீதரன் (ஹொலண்ட்), ஹரிஹரன் (அரினா கணனி நிலையம்), ஹரிஸ் (பிரான்ஸ்), அபிலாஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஞானேஸ்வரி, ஜெகனேஸ்வரி, நந்தினி, டிலாயினி, டிலோஜி, தினேஸ், பிருந்தா, பிருந்தாபன், பிரணவன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஞானசாகரன்,**
**சப்தசமுத்திரன் - 0033602154,**
**வர்ணராஜா - 0031 430 57010,**
**ஜெகநாத்** (இளைப்பாறிய உபதபால் அதிபர்)
(மகன்மார்).

*"ஹரிக்கிருஷ்ணா," சங்குவேலி, மானிப்பாய்.*
*0776628102* (C/42605)(11-12-53)

## செல்லப்பா விஜயரட்ணம் (டடா)

(OIC State Timber Corporation)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா விஜயரட்ணம் (OIC State Timber Corporation) நேற்று (01-05-2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா (PWD Overseer) நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரரும் காலஞ்சென்றவர்களான செல்லையா, ராசமணி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற விஜயலக்சுமி மற்றும் லீலாவதியின் அன்புக் கணவரும் Dr.விவியன் (விரிவுரையாளர் சித்த மருத்துவபீடம் கைதடி), விஜித்தா (சுவிஸ்), வினோதினி (Lanka Orics (Pvt) Ltd.) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.சத்தியசீலன் (சித்த மருத்துவ உத்தியோகத்தர், மாநகர சபை, யாழ்ப்பாணம்), சீவகுமார் (சுவிஸ்), ஸ்ரீதரன் (Maharajah org.) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிபஜன், நீரஜன் (St.John's College) காருண்யன், பிரியங்கா, அஸ்வின் (சுவிஸ்), டிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் செல்வரட்ணம், அரியரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (முன்னாள் அதிபர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அபிமன்னராஜா (ராஜாகராஜ் சுவிஸ்), சத்தியபாமா (ஜேர்மனி), அன்னம்மா, மகாதேவா, காலஞ்சென்ற நாராயணலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-05-2005) திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய்.* (44885)(26-11-12-53)

தகவல்:
**Dr.T.சத்தியசீலன்** (மருமகன்)

# நெஞ்சுவிட்டகலாத நினைவஞ்சலி

**13ஆம் ஆண்டதனில்**



தாய் மடியில் 30 - 07 - 1931

சாவின் பிடியில் 22 - 09 - 1992

## சீனியர் சுப்பிரமணியம்

**3ஆம் ஆண்டதனில்**



தாயின் மடியில் 03 - 05 - 1967

சாவின் பிடியில் 05 - 05 - 2002

## கருணாகரன் சகுந்தலா (வனிதா)

*சிறுப்பிட்டி*
திதி: 02-05-2005

பெண்ணிற்குப் பெருமை சேர்த்த பெருமகளே!
எம் கண்ணுக்குள் நிலவாக வாழ்ந்தவளே!
தாய் மண்ணிற்கு விடிவுகாலம் தேடிவர
தாயே நீ தனித்தெங்கு சென்றாய் அம்மா?

தாலாட்டி வளர்த்த தந்தையின்
தனிமைக்குத் துணைசேரச் சென்றாயோ?
தாயே நீ இங்கு வந்தாய் அம்மா
தமிழாக எம் வாழ்வில் கலந்தாய் அம்மா.

முகவரி: **சு.ஜெயக்குமார்,**
சிறுப்பிட்டி கிழக்கு, அரசன் திடல், நீர்வேலி.

**- குடும்பத்தினர்.**

(34470)(26-11-12-53)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் மே-02

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா பூர்த்தி செய்த அனைவருக்குமான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு பலகலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் உடற்கல்வி டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நான்காம் அணிமாணவர்கள் இதில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ள-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ்.மேதினப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னால் மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரமுகர்கள், தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள், கூட்டுறவாளர்கள், மத குருமார்கள், ஆசிரியர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்றனர்.

சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் ஆகியோரும் பேரணியில் கலந்துகொண்டு கொதிக்கும் வெயிலில் கால்கடுக்க நடந்து சென்றதைக் காணமுடிந்தது.

சமகால அரசியல் நிலைமையையும், இராணுவ அடக்குமுறைகளையும், உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை, அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலைப் பாதிப்புகள் ஆகிய விடயங்களையும் சித்திரிக்கின்ற அலங்கார ஊர்திகள் பேரணியை நிறைத்திருந்தன.

உயர்பாதுகாப்பு வலயத்தால் மக்களின் வாழ்விடங்களும் விவசாய நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் பல ஊர்திகளும் பேரணியில் பவனி வந்தன.

ஆழிப்பேரலைஅனர்த்தத்தினால், கடற்றொழிலாளர் சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை நேரடியாக வெளிப்படுத்தும் வகையிலும் பல ஊர்திகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இராணுவச் சித்திரவதைகள், சமாதான காலத்தில் இடம்பெறுகின்ற கொலைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்பனவும் மாதிரி வடிவங்களுடன் ஊர்திகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பேரணியில் சென்ற பலரும் தேசியத் தலைவர் பிரபாகரனின் உருவப் படங்களைக் கைகளில் வைத்திருந்தனர். அவர்கள் 'பொறுத்ததுபோதும் பொங்கி எழுவோம்' என்று வான் அதிரக் கோஷம் எழுப்பிச் சென்றனர்.

நல்லூரில் இருந்து அரசடி வீதி வழியே நகர்ந்த பேரணி, பலாலி வீதியை அடைந்தது. அங்கிருந்து அந்த வீதி வழியே திருநெல்வேலி நோக்கி முன்னேறியது. திருநெல்வேலிச் சந்தியில் இருந்து ஆடியபாதம் வீதி வழியே மருத்துவபீட மைதானத்தைப் பேரணி சென்றடைய சுமார் ஒன்றரை மணிநேரம் எடுத்தது.

திரண்டு வந்த பொதுமக்களும் ஊர்திகளும் நிறைத்துக்கொண்டதால் பலாலி வீதியில் சில மணிநேரம் போக்குவரத்துச் செய்யமுடியாது இருந்தது. மருத்துவபீட மைதானப் பகுதியும் அதனைச் சூழவுள்ள பிரதேசமும் சனத்திரளாகக் காட்சிதந்தது.

பேரணி சென்ற பாதைகளில் பெரும் எண்ணிக்கையான பொலீஸாரும் போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸாரும் நேற்றுக் காலை முதலே குவிக்கப்பட்டிருந்தனர். வீதிகளில் நெரிசல் ஏற்படாதவாறு தடுப்பதில் பொலீஸார் ஈடுபட்டிருந்தனர். பேரணியைப் பார்வையிட இராணுவத்தினரும் சந்திகளில் கூடிக் காணப்பட்டனர். எனினும், அசம்பாவித சம்பவங்கள் எவையும் இல்லாமல் பேரணி அமைதியான முறையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பேரணியை நெறிப்படுத்தி வழி நடத்தினர்.

பேரணியில் சென்றோரை உற்சாகப்படுத்தும் வகையில் அரங்க செயற்பாட்டிலான ஆற்றுகை நிகழ்வுகளும் ஆங்காங்கே நடத்தப்பட்டன. அரங்கப் பாடல்களும் இசைக்கப்பட்டன. யாழ்.அரங்க செயற்பாட்டுக் குழுவினர் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

கடும் வெயில் காலநிலை காணப்பட்டதால், பேரணியில் கலந்துகொண்ட மக்களின் நலன் கருதி வீதிகள் எங்கும் பவுசர்கள் மூலம் தண்ணீர் தெளிக்கப்பட்டது. யாழ். மாநகர சபை நீர்விநியோகப் பகுதியினர் இந்தப் பணியைச் செய்திருந்தனர். நேற்றைய பேரணி குறித்த ஓர் இடத்தைத் தாண்டிச் செல்ல ஒரு மணிநேரம் எடுத்தது. பேரணியின் முடிவில் மருத்துவபீட மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. (ஐ-7-12-15-17-30-86-117-31-70)

## தென்பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் லட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்த மேதினக் கூட்டம் நுவரெலியா நகர மத்தியில் கட்சித் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

மலையக மக்கள் முன்னணியின் கூட்டம் பதுளை நகரில் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.(ஏ)

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

சமாதானத்துறை (வடமராட்சி விவசாய சம்மேளனம்), உழைப்பாளர் சிலையாக நிற்றல் (புங்குடுதீவு - நயினாதீவு பலநோ.கூ.ச.), தொழிலாளர் சிலையாக நிற்றல் (முச்சக்கர வண்டிகள் சங்கம்), இடம்பெயர்தல் (நவாலி நலன்புரிச்சசங்கம்), தேயிலைத்தோட்டத் தொழிலாளர் (வேலணை பல நோ.கூ.ச.). (ஐ-12-30)

மேதினத்தை முன்னிட்டு கொழும்பில் நடந்த பேரணியில் நாட்டில் பசி, பட்டினி நிலைமை அதிகரித்து வருவதைச் சித்திரிக்கும் ஊர்தி வீதி வலம் வருவதை முதலாவது படத்திலும் - திருகோணமலையில் நடைபெற்ற மேதினப் பேரணியில் எடுக்கப்பட்ட படங்களை அடுத்தும் காணலாம்.

## மாமனிதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள் அவரது பூதவுடலுக்குத் தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது அஞ்சலியைச் செலுத்தினர். பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும் தமது இறுதி வணக்கத்தை அவருக்குச் செலுத்தினர்.

நேற்றிரவு அவரது பூதவுடல் மட்டக்களப்பு நோக்கி எடுத்துச்செல்லப்பட்டது. இன்று அவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படவுள்ளது. பின்னர் ஆலையடிச்சோலை மாயனத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் தலைமையிலான 12 பேர் கொண்ட குழுவினர் மாமனிதர் சிவராமுக்கு நேரில் அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று தரைமார்க்கமாக மட்டக்களப்பு சென்று சேர்ந்தனர்.

புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன், கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் இளங்கோ, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, ஊடகத்துறைப் பொறுப்பாளர் தயா மாஸ்டர் ஆகியோர் நேற்றுப் பகல் 11 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டனர்.

இன்று நடைபெறும் சிவராமின் இறுதிச் சடங்கில் இவர்கள் கலந்துகொள்வதுடன் தேசியத் தலைவரினால் வழங்கப்பட்ட மாமனிதர் பட்டத்தையும் அவரது குடும்பத்தினரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிப்பர். (எ-க-12)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்துக்கு மேதின ஏற்பாட்டுக் குழுத்தலைவர் திரிலோக மூர்த்தி தலைமை வகித்தார்.

மங்கள விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், பொது அமைப்புக்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை, வணிக ஒன்றியப் பணிப்பாளர் வெற்றியரசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா தேசியக்கொடி ஏற்றினார். சிறப்புரைகளை நாடாளுமற்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், கல்விப்பணிப்பாளர் மு.அமிர்தலிங்கம், தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தமிழ் விழி ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (கு-305-301-402)

## நுவரெலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டிய பகுதியிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுமுறையைக் கழித்துக்கொண்டிருந்தார்.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நேற்றுத் தமது கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றமுன்னர் ஜனாதிபதி குமாரதுங்கவை அவர் அங்கு நேரில் சந்தித்தார் அல்லது தொலைபேசி மூலம் தொடர்புகொண்டார் என ஒரு செய்தி தெரிவித்தது.

ஆனால், இ.தொ.கா பேச்சாளர் ஒருவர் அந்தச் செய்தியை அடியோடு மறுத்தார்.

அரசுத் தலைமைக்கு எதிராக கடந்த வாரம் கடுஞ்சீற்றத்துடன் இருந்த ஆறுமுகன் தொண்டமான் நேற்று மேதின உரையில் அரசைச் சாடாமல் அமுக்கி வாசித்ததற்கு அதற்கு முன்னர் ஜனாதிபதியுடன் அவர் விஸ்திரமாக உரை [illegible] (எ-க)

# கிளிநொச்சியில் இன்று சிவராம் நினைவு நிகழ்வு

கிளிநொச்சி, மே2

ஊடகவியலாளர் சிவராமின் நினைவு நிகழ்வு இன்று மாலை 4மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது. வெகுஜன ஒன்றியங்கள் இதனை ஏற்பாடு செய்துள்ளன. (எ)

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவராமை கடத்திச் சென்றவர்கள் இராணுவப் புனாய்வுப் பிரிவினரின் மகரகம, கொட்டாவப் பகுதியில் உள்ள மறைவிடத்தில் வைத்து அவரைச் சித்திரவதை செய்துள்ளனர் என்றும்-

அவரைக் கொல்வதற்கு முன்னர் அவரின் வாய்க்குள் சீலைத்துணியை அடைத்துச் சத்தம் வராதபடி இறுகக் கட்டினர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில் இனியபாரதி நேற்று அம்பாறை நீதிவான் கனீஸ் தம்மிக்க விஜயரத்தின முன்னிலையில் அம்பாறை தலைமையக இன்ஸ்பெக்டரினால் ஆஜர்செய்யப்பட்டார்.

அம்பாறை நகரில் கடந்த வெள்ளியன்று வாகனம் ஒன்றில் பிஸ்டலுடன் இவர் பயணித்த சமயம் கைதுசெய்யப்பட்டார் என இன்ஸ்பெக்டர் நேற்று நீதிவானிடம் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட வாகனத்தின் சாரதி எனத் தெரிவித்து எம்.எவ்.பௌசர் என்பவரையும் இன்ஸ்பெக்டர் ஆஜர் செய்தார். அவர்கள் இருவரையும் எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஹிங்குரானை சீனித்தொழிற்சாலை விடுதியில் சம்பந்தப்பட்ட இனியபாரதியைத் தங்க வைப்பதற்கு ஈ.பி.டி.பியின் அம்பாறைப் பிரதிநிதியும், முன்னாள் எம்.பியுமான குணசேகரம் சங்கர் ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என்றும்-

இனியபாரதியை விளக்கமறியலில் வைக்காமல் விடுவிக்கச் செய்வதற்கு அவர் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டார் என்றும் ஒரு செய்தி தெரிவித்தது.

ஊடகவியலாளர் சிவராம் வெள்ளி அதிகாலை கொழும்பில் சுடப்பட்டு சடலமாகப் போடப்பட்டார்.

ஆனால், வெள்ளிக்கிழமை இனியபாரதி கொழும்பில் இருக்கவில்லை. அம்பாறையிலேயே இருந்தார் எனக் காட்டுவதற்காகவே அவரை அம்பாறை நகரில் வெள்ளிக்கிழமை கைதுசெய்து ஞாயிற்றுக்கிழமை நீதிவான் முன் ஆஜர்செய்தோம் - என்று பொலீஸாரைக் கூறவைத்து நாடகம் நடத்தப்பட்டிருப்பதாக 'நிதர்சனம்' இணையத்தளம் குற்றம் சுமத்தியுள்ளது. (எ-க)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலாயுதபிள்ளை தவமணி

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியில் வசித்தவருமான திருமதி வேலாயுதபிள்ளை தவமணி அவர்கள் நேற்று (01.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2005) திங்கட்கிழமை வட்டக்கச்சியில் நடைபெறும்.

*இல.266, செல்வா வீதி,*
*வட்டக்கச்சி.* (C-42615)(38-11-34)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கனகாம்பிகை நல்லையா

(குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயக அடியவர்)



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திருமதி நல்லையா கனகாம்பிகை நேற்று (01.05.2005) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சைவபூசணம் நல்லையா (மலாயன் பென்ஷனர்) அவரின் அன்பு மனைவியும் அமரர்களான வைத்திலிங்கம் (பென்ஷன் அப்பா) - சிவகெங்கை ஆகியோரின் அன்பு மகளும் அமரர் திருமதி ஞானலக்சுமி - ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியை), திருமதி சிவகெங்கா சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை), சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கலாநிதி துரைச்சாமி (அமெரிக்கா), திருமதி கனகரத்தினம் சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி சிவசம்புநாதன் மகேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வலந்துயா, சிந்துயா, சாருயா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.05.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குப்பிழான் இந்துமாயனத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.28,*
*கைலாயபிள்ளையார் கோயில் வீதி,*
*நல்லூர்.* (44903)(38-11-34)

தகவல்:
ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(மருமகர்).

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரட்ணம் சிவபாக்கியம்

(பொன்னு)

மீசாலையைச் சேர்ந்த திருமதி கனகரட்ணம் சிவபாக்கியம் அவர்கள் 30.04.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை நடைபெறும். விவரம் நாளைய உதயனில் வெளிவரும்.

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.* (C-42616)(38-11-34)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நல்லையா வள்ளியம்மை



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா வள்ளியம்மை நேற்று (01.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நயினாதீவு முன்னாள் கிராமசபைத் தலைவரும் பிரபல சமூக சேவையாளரும் ஆகிய காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்பு மனைவியும் திருலிங்கநாதன் (வர்த்தகர் -கொழும்பு), லோகநாதன் (ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி வ.பி.போ.சபை), சாரதா தேவி (பிரான்ஸ்), கெங்காதேவி, செல்வநாதன் (பொறியியலாளர் -கொழும்பு), கலைநாதன் (அதிபர், யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் ம.வித்தியாலயம்), ஜெகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் பிற்பகல் 3 மணிக்கு நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"வளர்மதி"*
*நயினாதீவு -05.*

தகவல்:
ந.லோகநாதன்
(மகன் -ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி, வடபிராந்திய போக்குவரத்துச் சபை).

(44904)(38-11-34)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.